விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999, மார்கழி 1 உ (16-12-67) சனி ரம்ழான் 13 — புத்தகம் 22 இதழ் 17

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்



# வடக்கு கிழக்கில் வெள்ளத் தடுப்புக்கு நிரந்தரத் திட்டம்

## தமிழரசு எம்.பீக்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பர்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வருங்காலத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டால் மக்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கு ஒரு நிரந்தர வெள்ளத் தடுப்புத் திட்டமொன்றை உருவாக்குவதில் தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் தீவிர கவனம் செலுத்துவார்கள் என்று அறியப்படுகிறது. இத்திட்டம் உருவாக்கப் பட்டதும், அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படுமென்றும், திட்டத்தை தாமதமின்றி நிறைவேற்றும்படி அரசாங்கத்தை தமிழரசுக்கட்சி வற்புறுத்தும் என்றும் தெரிகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டதும், இதனால் இலட்சக் கணக்கானோர் வீடு வாசல்களை இழந்ததும், பயிர்பச்சைகள் நாசமடைந்ததும் தெரிந்ததே.

நெல், வெங்காயம், உருளைக் கிழங்கு, வாழைபோன்ற உணவுப் பொருட்களை பயிரிட்டு வந்த விவசாயிகளே இப் பெரு வெள்ளம் பெருமளவு பாதித்துள்ளது. தங்களின் வயிற்றுக்கு விவசாயத்தையே நம்பியிருக்கும் இவர்கள் எதிர்பாராது ஏற்பட்ட சேதத்தால் பீதியடைந்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருவின் முயற்சியால் உதவிப் பணம் அதிகரிப்பு

வெள்ளத்தால் வீடிழந்த மாதம் ரூபா 150/- க்கு குறைந்த வருமானமுள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபா 400/- வீதம் நிவாரண பணம் வழங்கப்படவிருக்கிறது.

ஆரம்பத்தில் மாதம் ரூபா 100/-க்கு குறைவான வருமானமுடையவர்களுக்கு மட்டுமே ரூபா 300/- உதவிப் பணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

எனினும் அமைச்சர் திருச்செல்வம் அரசாங்கத்துடன் வாதாடியதன் பலனாக ரூபா 150/-க்கு குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு ரூபா 400/- வீதம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இதனால், வீடிழந்தவர்கள் ஓரளவு தங்கள் வீடுகளை மீண்டும் அமைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

## கொஸ்கம பாடசாலை தமிழ்ப் பிரிவுக்கு சனவரியில் மூடுவிழா?

கொஸ்கம சிங்கள தமிழ் கலவன் பாடசாலையில் சனவரியிலிருந்து தமிழ் பிரிவை மூடி விடவேண்டுமென்று கல்விப் பகுதி மேற்படி கல்லூரி அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதன் காரணமாக தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளைச் சேர்க்க முடியாதென்று மேற்படி கல்லூரி அதிபர் தெரிவித்திருக்கிறாரென்று தெரிகிறது. இது பற்றி தோட்டத் தொழிலாளர்கள் இ. தொ. கழகத்துக்கு புகார் செய்ததை தொடர்ந்து இவ்விடயத்தை தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்தின் கவனத்திற்கு இ. தொ. க. கொண்டு வந்துள்ளது.

இது சம்பந்தமாக திரு. செல்வநாயகத்துக்கு பன்விலை மாவட்ட இ. தொ. க. பிரதிநிதி திரு. க. முத்தையா எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

"கேகாலை மாவட்டத்திலுள்ள கொஸ்கம சிங்கள தமிழ் கலவன் பாடசாலையில் தனித் தமிழ் பிரிவு நடத்த நீங்கள் ஏற்பாடு செய்தது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம்; இப்பாடசாலையில் சிங்களப் பிள்ளைகளோடு ஏறக்குறைய 150 தமிழ்ப் பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள், மூன்று தமிழ் ஆசிரியர்கள் மட்டுமே தமிழ் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கிறார்கள். இப்பகுதியில் இருபதினாயிரம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். 10 மைல் சுற்றுவட்டத்தில் இப்பாடசாலை மட்டும்தான் இங்குள்ளது.

இப்பாடசாலையில் சனவரி மாதம் தொடக்கம், புதிதாக தமிழ்ப்பிள்ளைகளைச் சேர்க்க வேண்டாமென்று கல்வி இலாகா, மேற்படி பாடசாலை அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும், தெரிகிறது. அதன்படி தோட்ட மக்களுக்கு பாடசாலை அதிபரால் அறிவிக்கப்பட்டு, தோட்ட மக்கள் எங்களுக்கு புகார் செய்த வண்ணமிருக்கிறார்கள்.

'அத்துடன், சனவரியிலிருந்து தமிழ் பிரிவை அகற்றி

(8-ம் பக்கம் பார்க்க)



யாழ். நகரில் 35 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் நவீன சந்தைக்கு அடிக்கல் நாட்டுவதற்காக அமைச்சர் பிரதமர் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் ... திரு வி. தர்மலிங்கம் பேசிக்கொண்டிருக்கிறார். டாக்டர் நாகநாதன், பிரதமர், உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாச, உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

## வட பகுதிக்கு 125,440 இருத்தல் விதை கிழங்கு உடன் அனுப்ப மந்திரி திருச்செல்வம் ஏற்பாடு

வட பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி. அமைச்சர் திருச்செல்வத்தின் முயற்சியால் இவ்வார இறுதிக்குள் 125,440 இருத்தல் விதை உருளைக்கிழங்கு வட பகுதிக்கு அனுப்பி வைக்க உணவு அமைச்சு ஏற்பாடு செய்து வருகிறது.

சமூக சேவை உதவி டைரக்டர் யாழ்ப்பாணம் விஜயம் செய்து உருளைக்கிழங்கு உற்பத்தி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதை நேரடியாக கண்ட பின்னர் கொழும்பு திரும்பினர். இதை யடுத்து திரு. திருச்செல்வம் உணவு அமைச்சுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து 125,440 இருத்தல் விதை உருளைக் கிழங்கை இவ்வார இறுதிக் கிடையில் வடபகுதிக்கு அனுப்பி வைக்க உணவு அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# காற்றிலே கிருமி உண்டு

லூயி பாஸ்டர் லீல் சர்வகலா சாலையில் பேராசிரியராக இருந்த காலத்தில் சாவகலாசாலையின் அடுத்துள்ள கிராமத்தில் சர்க்கரைக் கிழங்குகளை பெரிய தொட்டில்களில் போட்டு புளிக்காரமிட்டு மதுபானம் தயாரித்தனர். இதனுல் இவர்கள் அதிக இலாபம் அடைந்தனர். பாஸ்டர் லீல் சர்வகலா சாலையில் அமர்ந்தசிறிதுகாலத்தில் இவர்கள் பெரு நட்டமடைந்தனர்.

தொட்டிகளில் இடப்பட்ட சர்க்கரைக்கிழங்குகளில் சாம்பல் நிற நுரை படர்ந்தது. இது மதுபான மாகலைத் தடுத்தது. லுயிபாஸ்டரின் உதவியை நாடினர். ஒருநாள்பாஸ்டர் மரத்தொட்டிகளில் இடப்பட்ட சர்க்கரைச் சாற்றை அவதானித்தார்.

அந்த சாம்பல் நிற நுரைகளை ஓர் போத்தலில் விட்டு தனது ஆய்வு கூடத்திற்கு எடுத்துச் சென்றார். அதை நுண்ணுருக்கண்ணாடியால் மிக நுணுக்கமாய் ஆராய்ந்தார். இதனைப்பற்றுக கிருமிகள் என அறிந்தார். இக்கிருமி எவ்வாறு உண்டாகிறது என யோசிக்கலானார்.

இவர் ஓர் வளைந்த கண்ணாடிக் குழாயை எடுத்து அதனுள் சூப் (Soup) என்னும் நுரையையும் வைத்தார். அப்பொழுது கிருமிகள் கத்திகரிக்கப்பட்டன. பின் கண்ணாடிக் குழாயினுள்ள பவனத்தை நீக்கிவிட்டார். சில நாளின் பின் அவதானித்தபோது அதனுள் கிருமிகள் காணப்படவில்லை. எனவே பவனத்தில் கிருமியுண்டு என அறிந்தார்.

ஐ. நடேசன்.
மத்தியமகாவித்தியாலயம்,
நெல்லியடி.

---

# மாணவர் அரங்கு

அரம் போலும் கூர்மையரேனும்
மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்

அன்புள்ள தம்பி தங்கைகளே,

வணக்கம் — இவ்வாரம் உபதேசக் கதைகள் தொடர்பில் தம்பி கைலைநாதனின் கதையும் 'ரவிதிருந்தினன்' என்ற கல்முனைக்கலைராஜியின் மாணவர் சிறுகதையும் வெளியாகிறது. இளம் கவிஞர் யோகனின் கவிதையும், தையிட்டி மித்திராவின் 'தமிழ் தொகையினிலே எட்டு' தொகுப்பும் அரங்கை அணி செய்கின்றன. கிறிஸ்மஸ் கவிதைகளை உடனே அனுப்புங்கள். அடுத்தவாரம் மீண்டும்சந்திப்போம்.

**கோபு அண்ணு**

## துணிந்து நற்பணி தொடங்கிடுவோம்!

**— யோகன் —**

தீப ஒளியினை ஏற்றிடுவோம்
தீய வல்வினை மாற்றிடுவோம்
கோப அலைகளைப் போக்கிடுவோம்
கோயில் மனமென ஆக்கிடுவோம்!

நாளும் நன்மையை நாடிடுவோம்
நாவில் உண்மையைப் பேசிடுவோம்
சூழும் துயரினை வென்றிடுவோம்
சுயநல விருப்பைக் கொன்றிடுவோம்!

கதிரொளி பரவுள் ஏற்றிடுவோம்
கடவுளை மனதாற் தொழுதிடுவோம்
எதிரியை நண்பனுய் ஆக்கிடுவோம்
ஏற்றத் தாழ்வினைப் போக்கிடுவோம்!

அறத்தினைச் செய்ய விழைந்திடுவோம்
அனைத்திலும் இறையை உணர்ந்திடுவோம்
கரத்தினை நம்பிக் களித்திடுவோம்
கடமைக்(கு) உயிரை அளித்திடுவோம்!

ஆய கலைகளை அறிந்திடுவோம்
ஆய்ந்து வேலைகள் புரிந்திடுவோம்
தூய நினைவினைக் கொண்டிடுவோம்
துணிந்து நற்பணி தொடங்கிடுவோம்!

மாயும் மானிட வாழ்வென்று
மனதில் தெளிவாய்ப பதித்திடுவோம்
வாயும் வயிறும் நோக்காது
வாழ்வில் உயர்வை நோக்கிடுவோம்.

---

மாணவர் சிறுகதை

# ரவி திருந்தினன்

ரவியும் விசயனும் இணைபிரியாத நண்பர்கள். இருவரும் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள். ஆனல் படிப்பிலே விசயன் வெகு கெட்டி! ரவியோ படு மட்டி! விசயனுக்குப் படிப்பு தமிழைப் போல் இனித்தது. ரவிக்கு வேப்பங்காயாய்க் கசந்தது. ரவியின் தாயார் தலைமையாசிரியர் தன்னுல் இயன்றவரை முயன்று கண்டித்தார். தகப்பனில்லாத பையன்' என்று மேல் அவருக்கோர் அனுதாபம். விசயன் சாரதாமணி என்னும் ஆசிரியையின் தம்பி 'நல்ல ஒழுக்கமுள்ள... படிப்பில் ஆர்வமுள்ள பிள்ளைகளோடு தான் நீ பழக வேண்டும்' என்று சாரதா அடிக்கடி தம்பிக்குப் புத்திமதி கூறுவாள். ரவியை 'நல்ல ஒழுக்கமுள்ள பிள்ளை' என்று விசயனுடு பழக விட்டாள்.

பாடசாலையில் ஒரு விழா ஏற்பாடு செய்திருந்தார்கள். [illegible] பணம் கொண்டுவரச் சொல்லியும் அறிவித்துவிட்டார்கள். சாரதா தம்பி விசயனுக்குடனே கொடுத்து விட்டாள். ஆனல்......விசயனின் வதனம் பிரகாசிக்கவில்லை. பிஞ்சு மனதின் ஏக்கம் அவளுக்குப் புரிய சிறிது நேரமாயிற்று. 'ஏன் விசயா ஒரு மாதிரியாக இருக்கிருய்?' என்று கேட்கிருள். 'அக்கா! ரவி பாவம் அக்கா அவனிட்ட இப்போது காசு இல்லையாம். ஐந்து ரூபா வாங்கி வரச் சொன்னேன். அடுத்த கிழமை தருவானும் என்று தயங்கித் தயங்கிக் கேட்பதைப் பார்க்கவே விசயன் ரவியோடு எத்தனை பாசமும் அக்காவிடம் எத்தனை மதிப்பும் வைத்திருக்கிருன்... என்பதைப் புரிந்து கொண்டு 'சரி... இந்தா கொண்டு போய்க் கொடு' என்று அன்புடன் கொடுக்கின்றுள்,

ஒரு நாள் சாரதா தெருவில் செல்லும்போது ரவியின் தாயார் கண்டார். 'அம்மா...! இவன் ரவிய உங்கட தம்பியோட கூடவிடா தங்கம்மா... இவன் இல்லாத பொய்யும் சொல்லுருன். சிலவேளைகளில் களவும் எடுக்கிருன். தகப்பன் நல்லாய்த்தான வாழ்ந்து செத்தவர். இவன் என்ர குடிக்குமில்லாத கெட்ட பெயர் வாங்கித்தாறன். என்னல் முடியுமட்டும் அடித்துக் காயம்கூட வைததான. திருந்தினனில்ல. உங்கட பிள்ளையையும் கெடுத்துப் போடுவான்... சேரவிடாதிங்க... நேற்றுக்கூடப் பக்கத்து வீட்டில அரிசி வாங்க என்று சொல்லி ஐந்து ரூபா வாங்கி வச்சன் காணல்ல அம்மா... சாரதாவுக்கு நேரயாகவே 'சரியம்மா... உங்கட மகன நான் திருத்திவிடுறேன்.

## கல்முனைக் கலைராஜி

'இளமையில் வறுமை' கொடிதிலும் கொடிது என்று ஔவைப்பாட்டி கூட சொல்லியிருக்கிருளே!

அதுதானம்மா... அவனைக் கெட்ட வழியில் செல்லவிட்டிருக்கின்றது. இனிமேல் அடிக்காதிங்க! அன்பாகப் புத்தி சொல்லுங்க! இளமையில் குழந்தைகள் எதிர்பார்ப்பது அன்பு ஒன்றுதான்' ரவியின் தாய்க்கும் தன் தவறு புரிந்தது. அடுத்த நாள் 'ரவி சாரதா விடம் வாங்கிய ஐந்து ரூபாவையும் கொடுத்தான்; சாரதாவுக்குத்தானே எப்படிப்படிப பணம் கிடைத்தது என்று புரிந்து விட்டது. 'தம்பி ரவி இங்க வாப்பா... இந்தக் காசு பற்றி நீ அம்மாவிடம் சொல்லவில்லையா...? அம்மாவின் காசைப்பேசாமல்தானே எடுத்தனி!

'ஓம் அக்கா! அம்மாட்டக் கேட்டால் 'பொய்' சொல்லுறன் என்று அடிப்பாங்க! அதனுதான்! 'சரி நீ பொய் சொல்லுறபடியாலதானே அப்படி அம்மா அடிக்கிறுங்க! 'பொய் சொல்லக் கூடாது பாப்பா! என்றும் புறஞ் சொல்லலாகாது பாப்பா! தெய்வம் நமக்குத்துணை பாப்பா! என்றும் புறஞ் சொல்லலாகாது பாப்பா! தெய்வம் நமக்குத்துணை பாப்பா! ஒரு தீங்கும் வாமாட்டாது பாப்பா!' எவ்வளவு அழகா நம்ம பாரதியார் பாடியதை நீ படிக்கவில்லையா...? 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்று கூறுவார்கள். இனிமேல் அக்கா சொல்லோடு ஒழுங்கா நடக்க வேணும்! தெரியுமா? இந்தக் காசை அம்மாவிடமே உண்மையைக் கூறிக்கொடு.' சரி என்று ரவி தலையசைக்கின்றுன் பிஞ்சு வதனத்தில் திருந்திய ஒளி பிரகாசிக்கிறது.

---

# தமிழ் தொகையினிலே எட்டு

அரசக்குத்துணைவர்: மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகர மாக்கள், படைத்தலைவர், படைத்தலைவர், இவுளி வீரர், யானை வீரர்.

அளவை: காட்சி, அனுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உபமானம், அபாவம், சம்பவம், ஐதிகம்.

ஈசன் குணம்: தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கையுணர் வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்கல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை,

ஐசுவரியம்: இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன்மணி, நெல், வாகனம், அடிமை.

உணம்: நிலம், நீர், தீ, மதி, இயமானன், சூரியன், வாயு, ஆகாயம்.

சித்தி: அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசித்துவம், வசித்துவம்.

திக்கு: கிழக்கு, தெ. கிழக்கு தெற்கு, தெ. மேற்கு, மேற்கு, வ. மேற்கு, வடக்கு, வ. கிழக்கு.

திக்குபாலகர்: கிழக்காதி முறையே-இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வாரணன், வாயு, குபேரன், ஈசானன்.

திக்குயானைகள்: கிழக்காதி, முறையே-ஐராவதம், புண்டரிகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபௌமம், சுப்பிரதிமம்.

நாகம்: வாசுகி, அனந்தன் தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன்.

போகம்: பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

மங்கலம்: சாமரம், நிறைகுடம், கண்ணுடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல்.

மணம்: பிரமம், பிரசாபத்தியம், ஆருடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம்.

மலை: கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம்.

வசுக்கள்: அனலன், அனிலன், ஆபசைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன் பிரபாசன.

வெற்றிமாலை: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

சி. க. மித்திரா,
தையிட்டி.

---

உபதேசக்கதைகள் 3

# மாயை மயங்கியது

தேவரிஷி நாரதருக்குஒரு சந்தேகம் நம்மைப் போன்ற மகரிஷிகளையும் இந்த மாயை ஆட்டிப்படைக்குமா என்று.

கண்ணனது கண்டத்தில் சிரிப்பு எக்காளமிட்டது. 'நாரதரே! எனக்கு மிகவும் தாகமாயிருக்கிறது. பக்கத்துச் சுனைக்குச் சென்றுபருகச் சிறிது தண்ணீர் எடுத்து வருவீர்களா? என்று கேட்டார். 'இதோ எடுத்து வருகிறேன் பரந்தாமா! என்று சுனையை நோக்கிச் சென்றார் நாரதர்.

அங்கே எறிற் கொடியாள் ஒருத்தி மலர் பறித்து நின்றள்; மலரோடு நாரதரின் மனத்தையும் பறித்துவிட்டாள். நெருங்கிய நாரதமுனிவர் காதல் கனி மொழிகள் பல பேசி அவளைத் தம் இல்லக்கிழத்தியாகவே ஆக்கிக்கொண்டார். அதுமட்டுமா? அங்கேயே குடில் சமைத்து குடும்பமும் நடத்தினர். குடும்பமும் பெருகியது.

கரம் பற்றியவளின் கட்டளைக்கு கீழ்படிந்து அவள் களிப்பையே தமது இலட்சிய [illegible] கண்ணன் தாகத்துக்கு தண்ணீர் கேட்டதே மறந்துவிட்டது. நீர் குடத்துடன் தம் குடிலை நோக்கிவந்தவர் கண்ட காட்சி.

ஐயோ கடவுளே என்று அலறிவிட்டார் இப்படிக் குடியும், குடித்தனமுமாக இருந்தேனே என் வாழ்க்கை உனக்கு பொறுக்கவில்லையா? இப்படி என் குடி அழித்துவிட்டு என மனைவி மக்களை கொண்டுவிட்டாயே பாழுங் கடவுளே என்று இடிக் கொண்டு கண்ணனின் காலடியை நாடினர். தண்ணீர் கொண்டுவருவதற்குப் பதில் கண்ணீர் பெருக்கினர். நாரதரே தாகத்துக்கு தண்ணீர் கேட்டேனே கொண்டுவரக் காணுமே என்றார். இப்படி அலறிவரக் காரணம் என்ன என்றார்.

கைகளை பிசைந்து கண்களை துடைத்து நாரதர் திக்கபிரமை பிடித்தவர்போல் நின்றார். 'எத்தனை பெரிய மகரிஷிகளையும் இந்த மாயை ஆட்டிப்படைக்கும் என்பதை இப்பொழுதாவது உணர்ந்தீரா?' என்று பகவான் கண்ணன் கேட்ட பின்தான் நாரதருக்குத் தன் சுய உணர்வு வந்தது. கண்ணீர் [illegible]துவராத் திரும்பினர்.

— நா. கைலைநாதன்.
மட் நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலை மகேந்திரா,
இிமலை.

கே: பத்திரிகைகள் யாவும் ஒகோபித்து தமிழரசு எதிர்ப்புப் பிரசாரம் செய்வதால் தமிழா சுக்கட்சி ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து பதிலளிக்கலாமே?

ப: அந்தப் பத்திரிகைகளின் பிரசாரத்தை மக்கள் நம்புவதில்லை. அது பொய் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே அவைகளுக்குப் பதிலளிப்பதற்கு ஒரு தினசரி அவசியமில்லை.

கே: மினிஸ்கேட் மங்கைக்கும் சேலை அணியும் மங்கைக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?

ப: அவ்விரு மங்கையருக்குமிடையில் வித்தியாசமில்லை. அவர்கள் அணியும் உடைகளிற்தான் வித்தியாசம்.

ஃ

கே. ஆர். விஸ்வய்யா,
அப்பாவையதோட்டம்.

கே: சுதந்திரக் கட்சியினர் தேசிய அரசாங்கத்தை இழிவாக பேசுகிறார்களே! அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பிறரை இழிவுபடுத்துவது தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்வதாகும்.

ஃ

அகரிநதியன்,
பதுளை.

கே: காதலில் அலுப்புத்தட்டுவது எப்போது?

ப: காதலி காதலனைக் காலைவாரி விடும்போது.

கே: பணத்தின் பெறுமதி வீழ்ச்சியால் தொழிலாளரின் சம்பள உயர்வுக்கு வழி கிட்டுமா?

ப: கிட்டாது தொழிலாளர் தூங்கிக்கொண்டிருந்தால்.

ஃ

சே. பாலசுப்பிரமணியம்,
மன்னூர்.

கே: பணம் இல்லாதவர்களுக்கு உலகில் மதிப்பு இல்லை. ஏன்?

ப: அது அவர்களின் சொந்த மதிப்பு அல்ல — அவர்கள் வைத்திருக்கும் பணத்தின் மதிப்பு. பணத்தின் மதிப்புக் குறையும் போது அவர்களின் மதிப்பும் குறைந்து விடும். பணம் இல்லாதவனுக்குள்ள மதிப்பு குறைவாக இருந்தாலும், அது அவனுடைய சொந்த மதிப்பு-பணம் மதிப்பு குறைவாக இருந்தாலும் அவன் மதிப்பு குறையாது.

ஃ

ஆ. செல்வராஜ்,
தலவாக்கொல்லை.

கே: மலை நாட்டுத் தலைவர் நான்தான் என்று மார்தட்டி கூறுகிறாரே இ. தொ. கா. தலைவர். கல்வி மசோதா சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையிலே அவர் தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்கவேண்டுமென்று ஏன் வாதாடவில்லை?

ப: தோட்டப் பிள்ளைகள் கல்வி அறிவு பெற வழிபிறந்து விடுமென்பதற்காக.

ஃ

சொல் அழகன்,
கொட்டடி.

கே: 'லக்சல்' என்ற பெயருக்கு சமைய ஒரு தமிழ்ப்பெயர் கூறுவீரா?

ப: 'லக்சலா' என்ற சொல்லின் பன்மை 'லக்சல்'. ஆங்கிலத்தில் 'லக்' என்றால் அதிர்ஷ்டம். 'சல்' என்றால் உப்பு எனவே 'லக்சல்' என்பதை 'அதிர்ஷ்ட உப்பு' என்று கூறலாம்.

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: பொன்னம்பலத்தின் ஆட்டமெல்லாம் அடுத்தப்பொது தேர்தலிலே......?

ப: அடங்கிவிடும் என்று சொல்லுகிறீர்களா?

ஃ

ந. சிவசோதி,
நெல்லியடி.

கே: குயுக்தியாரே, நான் ஒருவருடன் சண்டையிட்டதால் சிலகாலம் கதைக்கவில்லை. இப்பொழுது கதைக்க விருப்பமாக இருக்கிறது. என்ன செய்யலாம்?

ப: மீண்டும் அவருடன் சண்டையிடப் போவதாக அவரிடம் நேரில் சொல்லுங்கள். அதன் பின் அவராகவே வந்து உங்களுடன் பேசத் தொடங்கிவிடுவார்.

ஃ

வாகீயோகானந்தம்,
மன்னிங்பட்டினம்.

கே: தைமாதம் 30ந்திகதிக்கு முன் தமிழரசாரின் கோரிக்கை நிறைவேறாவிடின் அடுத்த திட்டம் என்ன?

ப: 30ம் திகதிக்குப்பின் கட்சியின் முடிவை எதிர்பாருங்கள். அழைப்பு வந்தால் செயலில் இறங்கத் தயாராக இருங்கள்.

ஃ

வன்னி நம்பி,
தெல்லிப்பழை.

கே: ..................

ப: இதற்கு ஓரே வழி உடனடியாகத் திருமணம் செய்து கொள்வதுதான். உங்களின் கேள்வியை இங்கு குறிப்பிடவில்லை எனினும் பதிலிலிருந்து நேயர்கள் கேள்வியை ஊகித்துக்கொள்ள முடியும்.

ரடமன்
காரைதீவு

கே: ஒரு மாணவிக்கு கைக்குட்டை கொடுப்பதற்கு இருக்கிறேன் கொடுக்கலாமா?

ப: இந்தக் காலத்தில் ஒரு கைக்குட்டையைக் கொடுத்து என்ன பயன்? குறைந்தபட்சம் ஒரு மினிஸ் கோட்' பாவாடையாவது வாங்கிக் கொடுக்க வேண்டாமா?

ஃ

ரா. ஆனந்தசுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: அந்தக் காலத் தமிழன் கலப்பை பிடித்தான் இந்தக் காலத் தமிழன்?

ப: கலப்பை பிடிக்கும் நிலைக்கு இப்பொழுது தள்ளப்பட்டிருக்கிறான்.

கே: தேசிய அரசாங்கம் அமைக்க தமிழரசுக் கட்சி உதவியதனால் தலை தப்பிய பத்திரிகைகள் சிலவகுப்புவாதத்தை மீண்டும் மீண்டும் கக்குகின்றன என்ன செய்யலாம்?

ப: பத்திரிகை சுதந்திரம்! பத்திரிகை சுதந்திரம்! என்ற மந்திரத்தை 1008 தடவை ஜெபிக்கலாம்.

வள்ளியங்கன்
பதுளை

கே: கால் ஏக்கர் காணியில் வருடம் ஒரு போகம் அறுவடை செய்யாவிட்டால் என் மனையாள் என் மீது கோபிக்கிறாள். பயிறோ பசளையின்மையால் சோகை இழக்கிறது. இதற்கொரு உபாயம் கூறுவீர்களா?

ப: காணியைக் குத்தகைக்கு விடுங்கள்.

ஃ

தமிழரசுப் பித்தன்
காங்கேசன்துறை

கே: யாழ் அகற்றிச் சங்கத் தலைவர் இப்பொழுது ஏன் அதிகம் பேசுவதில்லை?

ப: உஸ்... அவர் இப்போதெல்லாம், இடமாற்ற சேவையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். பேசுவதற்கு நேரமில்லை.

ஃ

ஐ. செல்வரட்னம்,
வவுனியா.

கே: நான் ஒரு கலைஞன் என்னை சுதந்திரனில் அறிமுகம் செய்து வைப்பீர்களா?

ப: இதோ வைத்துவிட்டேன்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-14

செல்வி. ம. செ. அளம்பில்ருணி
அளம்பில்.

கே: குயுக்தியாரே! சுதந்திரனில் வாரந்தோறும் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினரைப் பற்றி வர்ணிக்கின்றீர்களே! இதன் நோக்கம் என்ன?

ப: ஒரு மக்கள் பிரதிநிதி என்றால் அவரது சேவைகளை மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டாமா? அதனால் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட முடியும். ஆதலின் சுதந்திரன இதுவரை அரைடசன் சேவைகளை' மக்கள் முன் வைத்துள்ளது.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: தற்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிலையென்ன?

ப: கட்சிக்குள் மூன்று கோஷ்டிகள். ஒரு கோஷ்டி தலைவிக்கு எதிராகக் கலகக்கொடி தூக்கியுள்ளது. மற்றொரு கோஷ்டி தலைமைக்கு சவால் விடுகிறது. பிறிதொரு கோஷ்டி தலைமையை ஏதோ ஒரு நோக்கத்துக்குப் பயன் படுத்துகிறது. இக்கட்சி விரைவில் பிளவுபடும் நிலையிலிருக்கிறது.

கே: சிவாஜி கணேசன் இரு வேடங்களில் நடிக்கும் படம் ............ தமிழ்நாட்டில் வெளியாகி ....

ப: உண்டு! அதுதான் குயுக்தியார் பாத்திரம்.



## பழைய பழக்கம்

ஆ மிழரசு பெற்றுக் கொடுக்கக் கூடிய தலைவர்களை நான் காலில் விழுந்து வணங்குவேன்.

— பொ. கட்சி தலைவர்.

— காலில் விழுந்து தெண்டனிடும் பழைய பழக்கம் இன்னும் அவரை விட்டு போகவில்லையா என்று ஆச்சரியப்படுகிறார் ஒரு யூ. என். பி.காரர்.

## இது தெரியவில்லையே!

மா வட்ட சபை வந்தால் தமிழர்கள் இரண்டு மூன்று மாவட்டங்களிலேயே முடங்க நேரிடும்.

— ஜீ ஜீ.

— மாவட்ட சபை வராவிட்டால், முடங்குவதற்கே இடமில்லாமல் கடலில் விழுந்து சாக வேண்டியேற்படும் என்கிறார் சிங்களக் குடியேற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதியைச் சேர்ந்த ஒரு தமிழர்.

## இ(ரு)தயம்!

ம ங்கையின் இருதயத்தை வயோதிபருக்குப் பொருத்தினர்.

— செய்தி

— அந்த வயோதிபரின் இதய அழுத்தை இனி அறியவே முடியாதென்கிறார் காதலில் தோல்கண்ட ஒரு வாலிபர்.

## வெங்காயமும் பெரியாரும்

ஈ. வெ. ராவுக்கு இலங்கைத் தேங்காய் வெண்ணை வழங்கப்பட்டது.

— செய்தி

— பெரியார் இனி வெங்காயத்தை கண்டபடி சிந்தாது பொரித்துச் சாப்பிடலாமே!

## இங்கேயே சொல்லலாமே!

அ ன்றும் இன்றும் சமஅந்தஸ்தே எனது கொள்கை.

—முல்லைத்தீவில் திரு. ஜீ. ஜீ.


— துணிவிருந்தால் இதைப் பாராளுமன்றத்திலேயே கூறலாமே! எதற்காக முல்லைத்தீவுக்கு ஓடோடிச்சென்று அங்கு நின்று கூறவேண்டும்.

## விளைவு புரிகிறதா?

தி ருமலைத் துறைமுகத்தில் இறக்குமதி வேலைகள் மந்தம்.


— செய்தித் தலைப்பு.

— தேசியமயத்தின் விளைவு இப்போது தெரிகிறதா என்று கேட்கிறார் துறைமுகத் தொழிலாளர் கழகப் பிரதிநிதி ஒருவர்



உங்கள் கட்டிடத் தேவைகளுக்கு
ANTUN
ஸ்லொட்டெட் ஆங்கிளும் ஷெல்வும்
வேண்டுமென்று கேட்கும்போதெல்லாம் நீங்கள் சரியான காரியத்தையே செய்கிறீர்கள்.

அன்டன்



ஸ்லொட்டெட் ஆங்கிளையும் ஷெல்வையும் துரிதமாகப் பொருத்தலாம். துளைக்கவோ, இணைக்கவோ, வர்ணம் பூசவோ வேண்டியதில்லை.
சிக்கனமானது — கூலிச் செலவு அதிகமிராது. நிர்மாணிப்பதற்கு அதிக நேரம் பிடிக்காது. முழுமையாக மறுபடியும் உபயோகிக்கக் கூடியது
உறுதிமிக்க கட்டுமானங்களை உருவாக்குகிறது. துளைகளும் துவாரங்களும் விஞ்ஞான முறைப்படி இடம் பார்த்து அமைக்கப் பட்டுள்ளமையால் பொருத்துகளிலும் மூலைகளிலும் அதிகமான சுரை ஆணிகளை இணைக்க இடமளிக்கிறது; கூடுதலான வலிமை கொடுக்கிறது; பொருத்துகள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அமைவது மிகவும் குறைகிறது.

**மேல் விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்**

விநியோகஸ்தர்கள்:

**செய்ன்ற் அந்தனிஸ் ஹார்ட்வேயர் ஸ்டோர்ஸ், லிமிட்டெட்.**
516, ஸங்கின்னாஸ் ரோட்டு தெரு,
கொழும்பு 10

**ஹன்டர் அன்ட் கம்பனி லிமிட்டெட்**
130, பூந்தோட்ட வீதி,
கொழும்பு 11.

**உற்பத்தியாளர்கள்:**

செய்ன்ற் அந்தனிஸ் இன்டஸ்ட்றீஸ் (குழு)
752/1, பேஸ்லைன் ரோட்டு, கொழும்பு 9.
தொலைபேசி : 92161 - 92162

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னம்பலத்துக்கு தமிழரசு எம். பி. பதில்:

# "யூ. என். பி. யுடன் நிபந்தனையின்றி சேர்ந்தவர் இன்று சமஅந்தஸ்து கூச்சல் போடுவதேன்?

## சிங்களச் சட்டத்தை அன்றே ஏற்றுக்கொண்டார் ஜீ. ஜீ."

"அன்றும் இன்றும் தமது கொள்கை சம அந்தஸ்தேயென்று திரு. பொன்னம்பலம் முல்லைத்தீவில் போய் கூறியிருக்கிறார். இதை கொழும்பிலிருந்து முல்லைத்தீவில் போயா கூற வேண்டும்? தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின்னர் ஒரு நாளாவது தமது வாயைத் திறந்து தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறாரா திரு. பொன்னம்பலம்? கடந்த தேர்தலில் யூ. என். பி. பெரும்பான்மையாக வெற்றிபெற்றதும், திரு. பொன்னம்பலம் யூ. என். பிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வந்தார். மொழியுரிமை பற்றியோ, தமிழ்பேசும்மக்களின் ஏனைய உரிமைகள் பற்றியோ யூ. என். பி. யுடன் எவ்வித உடன்பாடுகூட இன்றி தமது ஆதரவை அளித்தார். இப்படிப்பட்டவர் இன்று அதுவும்தமிழ்ப் பிரதேசத்தில் மட்டும் 'சம அந்தஸ்து' குரல் எழுப்புவது தமிழ் மக்களை ஏமாற்றும் நோக்கத்துடனா?" இவ்வாறு தமிழரசு எம்.பி.யொருவர் சுதந்திரன் நிருபருக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறினார்.

அண்மையில் முல்லைத்தீவில் நடைபெற்ற பொ. கட்சி கூட்டத்தில் தமிழரசாருக்கு எதிராக திரு. பொன்னம்பலம் தொடுத்த கண்டனங்களை தமது நிருபர் குறித்த எம். பி. யிடம் சுட்டிக்காட்டியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் நமது நிருபரிடம் கூறியதாவது:-

'திரு. பொன்னம்பலம் முன்னர் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை எழுப்பினார். அப்பொழுதும் அன்றும், இன்றும் என்றும் 50 க்கு 50 தான் தமது கொள்கையென்று முழங்கினார். ஈற்றில் ஒரு மந்திரிபதவியுடன் 50 க்கு 50 காற்றில் பறந்தது. ஐ. தே. கட்சியுடன் ஐக்கியமானார்.

1954ம் ஆண்டு சேர். ஜோன் கொத்தலாவலையால் உதைத்து தள்ளப்படும்மட்டும் மந்திரி பதவி வகித்தார்.

'1956ம் ஆண்டு மொழிப் பிரச்சினை பூதாகாரமாக தலையெடுத்தது. அந்த நேரத்தில் மீண்டும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கோரி மேடைகளில் முழங்கினார். ஆனால் '1956ல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியது.

சிங்களத்தை ஏற்றார்

அது நிறைவேறி ஓராண்டு முடிவதற்கு முன்பேயே, 1957ம் ஆண்டு தனிச் சிங்களத்தை ஏற்றுக்கொண்டு அதன் கீழ் சலுகைகள் பெறுவதே ஏற்றது என்ற கருத்தை வெளியிட்டார். இக்கருத்துப்பட திரு. பொன்னம்பலம் தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதம் சுதந்திரனில் வெளியிடப்பட்டிருந்தது. இதை திரு. பொன்னம்பலம் மறுக்க முடியுமா?

'சம அந்தஸ்துதான் அவரது கொள்கையென்றால் அந்தக் கொள்கையை நிறைவேற்ற திரு. பொன்னம்பலம் என்ன போராட்டங்கள் நடத்தினார்? என்ன தியாகங்கள் செய்தார்? சம அந்தஸ்து என்று மேடைகளில் கூறுவதைத்தவிர வேறு உருப்படியாக மொழியுரிமை பெற என்ன செய்தார்?

1965ல் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட நேரத்தில், திரு. பொன்னம்பலம் தேசிய அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிக்க முன்வந்தார். அப்பொழுது சம அந்தஸ்து கேட்டிருக்கலாமே. ஏன் கேட்கவில்லை?

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின்னர் ஒரு நாளாவது 'சம அந்தஸ்து' கோரி பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை!

இந்த நிலையில் தமிழ்ப்பகுதி மேடைகளில் போய் நின்று 'சமஅந்தஸ்து' கூப்பாடு போடுவது தமிழ்பேசும் மக்களை ஏமாற்றுவதற்கன்றி வேறென்ன?

'சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக்கட்சி கைவிட்டுவிட்டதென்கிறார் திரு. பொன்னம்பலம். எந்தக் கட்டத்திலும், சமஷ்டிக் கோரிக்கையை கட்சி கைவிட்டதுகிடையாது. இதை தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டே பாராளுமன்றத்தில் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம்.

மாவட்டசபை வந்தால், தமிழ்மக்கள் இரண்டு மூன்று மாவட்டங்களிலேயே முடங்க நேரிடும் என்று திரு. பொ. கூறியிருக்கிறார். இது ஒரு அப்பட்டமான பொய்ப்பிரசாரம்.

இப்பொழுது தமிழ் பிரதேசங்களாக இருக்கின்ற வடக்கும், கிழக்கும், மாவட்ட சபைகள் நிறுவப்படுவதன் மூலம் தொடர்ந்தும் தமிழ்ப் பிரதேசமாக விளங்க வழியேற்படுகிறது. அத்துடன் இந்த இரண்டு மாகாணங்களிலிருக்கும் தமிழ்பேசும் மக்கள் தங்கள் அலுவல்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளவும் முடியும்.

மாவட்ட சபை மசோதா சமர்ப்பிக்கப்பட்டதும் திரு. பொன்னம்பலம் கூறியவை முற்றிலும் பொய்யென்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள்.

## செய்திகளை முந்தித் தரும் தினபதியின் இலட்சணம்

எந்தச் செய்தியையும் முந்தித் தருவது நான்தான் என்று தனக்குத் தானே புகழாரம் சூட்டிக் கொள்ளும் 'தினபதி' உண்மையில் எந்தச் செய்தியையும் பிந்தித் தரும் தினசரியாகவே இருக்கிறது. அதற்கு உதாரணம் வேண்டுமா? இதோ மூன்று உதாரணங்கள் தருகிறோம்.

1. இலண்டனில் காட்டப்பட்ட இலங்கையைப் பற்றிய டெலிவிஷன் திரைப்படச் செய்தியை தினகரன் டிசம்பர் 8-ம் திகதி உள் பக்கத்தில் வெளியிட்டிருந்தது.

இப் பழைய செய்தியை டிசம்பர் 9-ம் திகதி தினபதியின் சகோதரப் பத்திரிகையாகிய சிந்தாமணி கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது.

2. பிரதமரது யாழ்ப்பாண விஜயம் பற்றிய செய்தியை ஏனைய தினசரிகள் டிசம்பர் 6-ம் திகதியே படங்களுடன் வெளியிட்டுவிட்டன.

ஆனால் தினபதியோ டிசம்பர் 7-ம் திகதியே இச் செய்தியை வெளியிட்டது.

3. தமிழரகத் தலைவர் திரு. செல்வநாயகம் நெற்றியில் காயமுற்றிருப்பதாக தினபதி 8-ம் திகதி ஒரு முன் பக்கச் செய்தியை வெளியிட்டது. திரு. செல்வநாயகம் நெற்றியில் காயம்பட்டது 'தினபதி செய்திக்கு ஏறத்தாழ 10 நாட்களுக்கு முன்னர். 'தினபதி' அச் செய்தியை வெளியிட்டபோது திரு. செல்வநாயகம் எவ்வித காயமுற்றுமிருக்கவில்லை.

காயம் ஆறியபின்பே செய்தி வெளியிடுவதுதான் சுடச் சுட செய்தியா?

'தினபதி' முந்திச் செய்திகளைத் தரும் இலட்சணம் இதுதானா?

## கனடாவின் முன் மாதிரியை இலங்கையும் பின்பற்றுமா?

மொழிப் பிரச்சினையால் அல்லல்படும்நாடுகளுக்கு கனடா ஒரு முன்மாதிரியைக் காட்டியுள்ளது. இந்த முன்மாதிரி, இலங்கைக்கு நூற்றுக்கு நூறுவீதம் பொருந்தும்.

இலங்கையைப் போன்றே கனடாவிலும், இருமொழிகள் பேசப்படுகின்றன. அவை ஆங்கிலமும், பிரஞ்சுமொழியும். ஏறத்தாழ 2 கோடி மக்கள் வாழும் கனடாவில், ஆங்கிலம் பேசுவோர் பெரும்பான்மையினராகவும், பிரெஞ்சுமொழி பேசுவோர் சிறுபான்மையினராகவும் இருக்கிறார்கள். பிரெஞ்சுமொழி பேசும் மக்களின் தொகை 60 லட்சம்.

கனடாவில் பிரெஞ்சுமொழி பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்துவரும் பிரதேசம் கியூபெக மாகாணம். இங்கு தமிழ்பேசும் மக்கள் வட, கிழக்கில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருவது போல, கியூபெக் மாகாணத்தில் பிரெஞ்சு மொழி பேசும் சிறுபான்மை மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

கியூபெக் மாகாணத்தில் மட்டுமே ஆங்கிலமும் பிரெஞ்சும் உத்தியோக மொழிகளாக இப்பொழுது இருந்துவருகின்றன, இதர மாகாணங்களில் பிரஞ்சு மொழி உத்தியோகமொழியாக்கப்படாமலிருந்து வந்தது. இதனால் பிரஞ்சுமொழி பேசும் மக்கள் கஷ்டத்துக்கு ஆளானார்கள்.

இதன்பயனாகபிரஞ்சுமொழி பேசும் மக்களில் ஒரு சாரார் கியூபெக் மாகாணத்தை கனடாவிலிருந்து பிரித்து தனிநாடாக்க வேண்டுமென்ற இயக்கம் தோன்றி வளர ஆரம்பித்தது.

இந்த இயக்கத்தின் 'சுதந்திர கியூபெக்' கோரிக்கையைத்தான் சில மாதங்களுக்கு முன்னர் கனடாவின் [illegible] தாரியாகச் சென்ற பிரஞ்சு அதிபர் டிகால் ஆதரித்து முழக்கமிட்டார்.

பிரஞ்சு மொழிபேசும் மக்களிடையே இப் பிரிவினை இயக்கம் வளர ஆரம்பித்ததும், அவ்வியக்கத்தை இதோ நசுக்கி விடுகிறேன் என்று கனடாப் பிரதமர் சீறியெழவில்லை. மாறாக பிரஞ்சு சிறுபான்மை மக்களின் குறைபாடுகளையும், அதை நிவர்த்திக்கும் வழிவகைகளையும்கண்டறிய ஒருரோயல் கமிஷனை நியமித்தார்.

ரோயல்கமிஷன் தனது சிபார்சுகளை இப்பொழுது வெளியிட்டிருக்கிறது. கமிஷன் சிபார்சின் அடிப்படையில் விரைவில் நடவடிக்கையெடுக்கப்படுமென்று கனடாப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

ரோயல் கமிஷன் பின்வருமாறு சிபார்சு செய்துள்ளது:

'ஆங்கிலம், பிரஞ்சு இரண்டும் கனடாவின் தேசியமொழிகளாக்கப்படவேண்டும். கனடா இவ்விரு மொழிகளுக்கும், அவற்றின் கலாசாரங்களுக்கும் சரிசம அந்தஸ்தளிக்கும இரு மொழி நாடாக்கப்பட வேண்டும்.

'கனடாவின் பாராளுமன்றம், நீதிமன்றங்கள் மற்றும், அரசாங்க நிர்வாகம் அனைத்திலும் உத்தியோக மொழிகளாக ஆங்கிலமும் பிரஞ்சும் பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

'கியூபெக் மாகாணத்தில் ஏற்கெனவே பிரஞ்சுமொழி உத்தியோகமொழியாக விருக்கிறது. பிரஞ்சுமொழிபேசும் மக்களை 10 சத விதமாகக் கொண்ட இதர மாகாணங்களிலும் பிரஞ்சுமொழிக்கு உத்தியோக அங்கீகாரம் அளிக்கப்படவேண்டும்.'

[illegible] புருன்ஸ்விக் ஆகிய மாகாணங்களிலும், பிரஞ்சுமொழி அரச கரும மொழியாக்கப்படவேண்டும் என்றும் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

பிரஞ்சுமொழிபேசும் மக்களுக்கு திருப்திகரமான முறையில மொழிப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நாடு பிளவுபடுவது தவிர்க்கமுடியாதது என்றும் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது.

பிரஞ்சுமொழிபேசும் மக்கள் வாழும ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் நிம்மதியுடன் வாழ்க்கை நடத்துவது சாத்தியமாக்கப்படவேண்டும் என்றும் கமிஷன் கூறியுள்ளது.

சிங்களம் மட்டும் கோஷமெழுப்பும் இங்குள்ள வகுப்புவாதிகளுக்கும் இந்தி மட்டும் கோஷமெழுப்பும் இந்தியவகுப்புவாதிகளுக்கும் நல்ல தோர் பாடத்தை கனடா கற்றுக் கொடுத்திருக்கிறது.

## தேர்தல் கமிஷனர் எஸ். ஜே. வி. யிடம் மன்னிப்பு கேட்கிறார்

தமிழ் பேசும் வாக்காளர்களுக்கு தமிழிலும், சிங்களவர்களுக்கு சிங்களத்திலுமே வாக்காளர் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன' திரு. இ. சரவணமுத்து என்பவருக்கு சிங்களத்தில் வாக்காளர் அட்டை வழங்கப்பட்டது தவறுதலாக ஏற்பட்டது. இதற்காக நான் தங்களிடம் மன்னிப்புக்கேட்பதுடன் இனிமேல் இப்படியான தவறுகள் ஏற்படாதென்றும் தங்களுக்கு உறுதியளிக்கிறேன்." இவ்வாறு தேர்தல் கமிஷனர் திரு. டயஸ் அபயசிங்க தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்துக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார்.

(14-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. ஆர். விஜயா முன்னணிக்கு வர காரணம்

# கே. எஸ். கோபாலகிருஷ்ணன் அல்ல



கல்பனாவின் இக்கவர்ச்சித் தோற்றத்தை மெட்ராஸ் டு பாண்டிச்சேரி படத்தில் காணலாம். இப்படம் விரைவில் சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கும்

## நடிகர் பிரேம்நவாஸ் வெளியிடும் தகவல்

கே. ஆர். விஜயா முன்னுக்கு வரக் காரணமாக இருந்தது எது? என்ற ரகசிய தகவலை நடிகர் பிரேம் நவாஸ் கூறினார்.

நடிகர் பிரேம்நவாஸ் நிருபரிடம் கூறியதாவது:

கே. ஆர். விஜயா முன்னணி நட்சத்திரமாக விளங்க காரணமாக இருந்தது ''கற்பகம்'' படம்தான என்று கூறுவது சரி அல்ல.

''கற்பகம்'' படம் வெளிவருமுன்பே கே. ஆர். விஜயா நடித்த ''கால்பாடுகள்'' (பாதச்சுவடுகள்) என்ற படம் வெளிவந்தது. இது ஒரு பக்திப் படம். இதில் ஏசுவின் அம்மா ஆன மரியன்னையாக நடித்தார் கே. ஆர். விஜயா.

கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்ஷனில்தான் கே. ஆர். விஜயா முதல் முதலாக முன்னுக்கு வந்தார் என்று சொல்ல முடியாது.

''கால்பாடுகள்'' படத்தை டைரக்ட் செய்தவர் கே. எஸ். அன்டனி என்பவர். அவர் டைரக்ஷனில்தான் கே. ஆர். விஜயா ஒரு நட்சத்திரம் ஆனார்.

அந்தப் படத்தில் உள்ள 'போட்டோ'வைக் காட்டித்தான் தமிழ்ப் படங்களில் விஜயாவால் நடிகைஆக முடிந்தது. அதில் அவ்வளவு அருமையாக நடித்து அழகான தோற்றத்துடன் விளங்கினார்.



கே. ஆர்: விஜயா முன்னுக்கு வரக் காரணமாக இருந்தது எது என்பதை இதில் இருந்து ரசிகர்கள் தெரிந்து கொள்ளலாம். இந்த விஷயம் இதுவரை வெளிவராத இரகசியமாக இருந்தது!'' என்று பிரேம் நவாஸ் கூறினார்.

## எம். ஜீ. ஆரின் டெலிபோன் காதலி

மக்கள் திலகத்தின் வீட்டு டெலிபோன் மணி கணகணத்தது. அவரே எடுத்தார்.

'ஹலோ! யாருங்க பேசறது?' —ஒரு மெல்லிய பெண் குரல் கேட்டது.

'எம். ஜி. ஆர்தான் பேசறேன்; என்னங்க? நீங்க யாரு?'

'நான் யாரா இருந்தால் என்ன? அதை அப்புறம் சொல்றேன்; சாப்பாடு ஆயிட்டுங்களா?'—அந்தப் பெண்ணே கேட்டாள்.

'இன்னும் நான் சாப்பிடலீங்க: இனிமேதான்' என்றார் மக்கள் திலகம்.

'அட இன்னுமா சாப்பிடாம இருக்கீங்க? இது மாதிரி இருந்தா உடம்பு என்னத்துக்குங்க ஆகும்!'—

கணவனை மனைவியைகேட்பதுபோல் மிகவும் கரிசனமாகக் கேட்டாள் அந்தப் பெண்.

முன்பின் பழகாத அந்தக் குரலுக்கு உரியவர் யாராக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்த மக்கள் திலகம், திடீரென்று அந்தமுனை போனிலிருந்து ஒரு ஆண் குரல் வருவது கேட்டுத் திகைத்துப் போனார்; அந்தக் குரலை உன்னிப்பாகச் செவிமடுத்தார்.

'என் வீட்டில் எனக்குத் தெரியாம என்னென்னமோ நடக்குதே! உம்! எத்தனை நாளா இதெல்லாம்?...' என்றது அந்தக் குரல்.

ஒரே ஒரு வினாடிதான்—அப்படிப் பேசுவது யாரென்று கண்டுகொண்டார் மக்கள் திலகம்!



'வணக்கம் அண்ணா' என்று சிரித்தபடியே சொன்னார் அவர்!

ஆம், பேரறிஞர் அண்ணா அவர்களின் குரல்தான் அது!

அந்தப் பெண் குரலுக்குச் சொந்தக்காரி யார் தெரியுமோ? அண்ணா அவர்களின் மகன் இளங்கோவன்பெற்ற மகளான கண்மணி என்னும் சிறுமியின் குரல்தான் அது!

எம். ஜி. ஆர். என்றால் உயிர் அந்தச் சிறுமிக்கு! அது மட்டுமல்ல; 'எம். ஜி. ஆரைத்தான் நான் மணப்பேன்' என்றும் சொல்லுகிறது, அந்த மூன்று வயதுக் கண்மணி!

அண்ணா அவர்களின் மனைவியார் இராணி அம்மையார்கூட ஒருமுறை 'காஞ்சீபுரத்திலிருந்து 'ட்ரங்கால்' வந்ததா?' என்று கேட்டார்கள் எம். ஜி. ஆரிடம்.

'ஒன்னும் வரலிங்களே!' என்று கூறி விழித்தார் மக்கள் திலகம்!

'அதாம்பா, கண்மணி ஏதாவது ட்ரங்கால் போட்டாளான்னு கேட்டேன்' என்றார் அண்ணா

'குபீ' ரென்று சிரித்துவிட்டார்கள் கூடியிருந்தவர்கள்; 'போங்க அண்ணா, என்ன நீங்களும் என்னைக் கேலி பேச ஆரம்பிச்சுட்டீங்க' என்றார் மக்கள் திலகம்!

## ஜெயலலிதா வெளிநாடு போகிறார்

ஜெயலலிதா சுவிட்சர்லாந்து போகிறார்.

ஸ்ரீதர் டைரக்ஷனில் சித்ராலயாவின் கலர்ப்படம் ஒன்று உருவாகி வருவது தெரிந்ததே. இதில் சிவாஜிகணேசன் ஜோடியாக நடிக்கிறார் ஜெயலலிதா. வெளிநாட்டில் உள்ள



உல்லாச மாளிகைகளில் தங்கி பணத்தைத் தண்ணீராகக் கரைக்கும் 'மைனர்' வேடத்தில் நடிக்கிறார், சிவாஜிகணேசன். அதனால் வெளி நாடுகளிலேயே வெளிப்புறக்காட்சிகளை படம் ஆக்க ஸ்ரீதர் திட்டமிட்டு உள்ளார்.

சுவிட்சர்லாந்து, இத்தாலி, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் படப்பிடிப்பு நடக்கிறது.

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் 15-திகதி முதல் ஆகஸ்ட் மாதம் முடியும்வரை படப்பிடிப்பு நடக்கிறது. சிவாஜிகணேசன், ஜெயலலிதாவுடன் படப்பிடிப்பு குழுவினரும் வெளிநாடுகளில் 45 நாட்கள் தங்குகிறார்கள்.

இது பற்றி நமது நிருபரிடம் ஸ்ரீதர் கூறியதாவது:—

இதே கதையை தமிழிலும் இந்தியிலும் தயாரிக்கிறேன். இரண்டு படங்களுக்கும் சேர்த்து ஒருகோடி 10லட்சம் ரூபாய் செலவாகும். இதுவரை யாரும் போடாத படப்பிடிப்பு 'செட்' ஒன்றும் விஜயா படப்பிடிப்பு நிலையத்தில் அமைக்கப் படும்.

தமிழ்ப் படத்துக்கு மட்டும் ரூ.35 லட்சம் செலவாகும். இவ்வளவு பணத்தை தமிழ்ப் பட 'மார்க்கெட்டு' தேடிக் கொடுக்கும் என்ற நம்பிக்கையால்தான் துணிந்து செய்கிறேன்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நிவாரண வேலைகளில் தமிழரசு எம். பீக்கள் தீவிரம்

## திருச்செல்வத்தின் துரித நடவடிக்கை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து ஒன்பது தினங்களாக பெய்த பேய் மழையாலும், வீசிய கடும் புயலினாலும் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானேருக்கு உடனடி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வமும், தமிழரசு எம். பிக்களும் முழு மூச்சுடனீடுபட்டுள்ளனர். வீடுகளையும், சொத்து சுகங்களையும் இழந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் அடைக்கலம் புகுந்துள்ள வெள்ள அகதிகளுக்கு இலவச அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இரு வார காலத்துக்கு இவை வழங்கப்படுமென்று தெரிகிறது.



வடக்கு கிழக்கு மாகாணங்களில் இதற்கு முன் என்றுமில்லாத அளவுக்குபேய் மழை ஒன்பது தினங்களாக தொடர்ந்து பெய்ததும், தொடர்ந்து புயல் வீசியதும் தெரிந்ததே.

இந்தக் கடுமழையால், வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரும்பாலான பகுதிகள் வெள்ளக்காடாகின. பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து தவிக்கின்றனர்.

வட, கிழக்குப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதில் தமிழரசு எம். பீக்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இம்மாதம் 9-ம் திகதி உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம்யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் விசேட விமான மூலம் பறந்து சென்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குநேரடியாக விஜயம் செய்து வெள்ளச் சேதங்களை மதிப்பிட்டார். அமைச்சருடன் சமூக சேவா உதவி டைரக்டர் திரு. ருபசிங்க தமிழரசுத் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பா. உ. ஆகியோர் கொழும்பிலிருந்து உடன் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் அமைச்சர் குழுவினருடன் யாழ். அரசாங்க அதிபர், செனட்டர் சு. நடராசா, திரு. வி. தர்மலிங்கம் பா. உ. ஆகியோர் சேர்ந்து கொண்டனர்.

### சோகக்கதையை கேட்டனர்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் அமைச்சரும் அவரது கோஷ்டியினரும் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்டு, கோயில்களிலும், பாடசாலைகளிலும் அடைக்கலம் புகுந்துள்ள மக்கள் தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்திடம், கண்ணீர் சிந்தியபடி தம் சோகக் கதையைக் கூறினர்.

திரு. செல்வநாயகமும், அமைச்சர் திருச்செல்வமும், வெள்ள அகதிகளுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்க உடன் நடவடிக்கையெடுப்பதாக உறுதியளித்தனர்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட இடங்களில், அதிக சேதமடைந்த பகுதிகள் ஏழாலை, கந்தர்மடம், தாவடி, சுதுமலை, அம்பத்தனை ஆகிய பகுதிகள் என்று கூறப்படுகிறது.

உடுவில் எம். பி. தர்மலிங்கத்தின் வீட்டுக்குள்ளும் வெள்ளம்புகுந்ததால் திரு. தர்மலிங்கமும் தமது வீட்டைக் காலி செய்ய வேண்டியதாயிற்று.

### ரயில் பெட்டியில் தஞ்சம்

கோண்டாவில் பகுதியில் வீடிழந்தவர்கள் புகையிரத ஸ்டேஷனிலுள்ள 30 ரயில் பெட்டிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

யாழ்ப்பாண மாநகரம் ஒரே வெள்ளக்காடாய்க் காட்சி அளித்தது. சமூக சேவை அமைச்சுடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு திருச்செல்வம் தொடர்பு கொண்டு வெள்ள அகதிகளுக்கு இலவச உணவும் உணவுப் பொருட்களும் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். இரு வாரங்களுக்கு இலவச உணவு வழங்கப்படுமென்று தெரிகிறது.

டாக்டர் நாகநாதன் சுகவீனமாக இருப்பதாகவும், நல்லூர்த் தொகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதத்தை மதிப்பிட்டு வரும்படியும் அமைச்சரிடம் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

### 150,000 பேர் வீடிழந்தனர்

யாழ்ப்பாணத்தில் சுமார் 150,000 மக்கள் வீடு இழந்துள்ளதாகவும் 28,000 குடும்பங்கள் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வீடுகளை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவென சமூக சேவை உதவி டைரக்டர் திரு. ருபசிங்க ருபா ஒரு லட்சம் ஒதுக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

தேசிய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து அதிக உணவு பயிரிடும் திட்டத்தின் கீழ் உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகிய உப உணவுப்பொருட்கற பயிரிட்டு வந்த விவசாயிகளுக்கு பெருத்த சேதமேற்பட்டுள்ளது இவர்கள் முன்பு புகையிலை பயிர் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமென உணவு அமைச்சரை உள்ளூராட்சி அமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிறார். இது பற்றிய நிலையை நேரடியாக கண்டறிய ஓர் உயர்தர அதிகாரியை உணவு அமைச்சர் யாழ்ப்பாணம் அனுப்பவிருக்கிருர்.



### மட்டுநகர் நிலை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பகுதிகளையும் அமைச்சரும் அவரது கோஷ்டியினரும் பார்வையிட்டனர்.

அமைச்சருடன், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை, உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. செல்வநாயகம் ஆகியோருடன், சமூக சேவை உதவி டைரக்டரும் சென்றிருந்தார்.

மட்டக்களப்பு வெள்ள அகதிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. சேதம் பற்றிய விபரங்களைத் தயாரிப்பதில் மட்டு நகர் எம். பி. திரு செ. இராசதுரை ஈடுபட்டுள்ளார்.

வட பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்

(9-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரஜாவுரிமை பெற தேடி வைத்திருக்க வேண்டிய ஆதாரங்கள் எவை?

சென்றவார சுதந்திரனில் இலங்கை இந்தியச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை எந்த அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது என்பதை வகைப்படுத்தியிருந்தோம்.

அதில் நாம் குறிப்பிட்டுள்ள ஆறுவகையினரும் பொதுவாக நிரூபிக்க வேண்டிய ஒரு அம்சம் உண்டு. 15-11-1948க்கு பின் தொடர்ந்து இலங்கையில் வாழ்ந்துவருவதாக நிரூபிக்க வேண்டும்.

இதற்குப் பின்வரும் சான்றுகளை தேடி வைத்துக்கொள்வது நலம்.

1. கூப்பன் புத்தகம்.

2. வீட்டுக் குடியிருப்பாளரின் பட்டியல்.

3. இலங்கையில் நிரந்தரமான சொத்துக்களிருந்தால் அவற்றின் விபரம். (அதாவது காணி பூமி முதலியவைவும், அவை வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட விபரங்களை).

4. பாடசாலையில் கல்விகற்றிருந்தால், அதற்குரிய அத்தாட்சிப் பத்திரம்.

5. [illegible] செய்து வருவதற்கு [illegible] அத்தாட்சிப்பத்திரம்.

6. வருமானவரி கட்டியிருந்தால் அதற்குரிய அத்தாட்சிப் பத்திரம்.

7. திருமணப் பதிவு அத்தாட்சிப்பத்திரம்.

8. பிள்ளைகள் பிறந்திருந்தால், பிள்ளைகளின் பிறப்பு சாட்சிப்பத்திரம்.

9. சமூகசேவை, விளையாட்டு போன்ற துறைகளில் ஈடுபட்டு ஏதாவது சான்றிதழ் பெற்றிருந்தால் அச்சான்றிதழ் விபரம்.

10. பிள்ளைகளின் பாடசாலைக் கல்விபற்றிய விபரம்.

11. இலங்கைப் பிரஜாவுரிமைபெற இதற்குமுன் முயற்சித்திருந்தால், அதன் விபரம்.

இந்திய, பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்தவர்கள் பின்வரும் தஸ்தாவேஜுகளை தயாராக வைத்திருக்கவேண்டும்.

1. இந்திய, பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே அனுப்பிய விண்ணப்பத்தின் பிரதி.

2. அதுசம்பந்தமாக ஏதாவது கடிதத் தொடர்புகளை

(9-ம் பக்கம் பார்க்க)






பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தந்தி: தாமரை
தொலைபேசி 3597—6522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜப்பிரியன்

# நிழலின் சூடு

இவ்வாரச் சிறுகதை

அதிகாலையிலேயே எழுந்து காலைக் கடன்களை முடிக்க மிஞ்சி மிஞ்சிப் போனாலும் எனக்கு ஆறரை மணிக்கும் அதிகமாகாது.

சாதாரண ஒரு 'கிளார்க்கர்' நான். அலுவலகம் ஒன்பது மணிக்குத் தானே என்று நினைத்து என் மனைவியைப் பற்றித் தவறான எடை போட்டுவிடாதீர்கள். அவள் அப்படியொன்றும் படுத்தேய்ச் சாமல் 'பெட் கோப்பி' கேட்கும் பறங்கிச்சி அல்ல.

யாழ்ப்பாணத்தில் தான். இப்படிச் சொல்லிவிட்டால் போதாது. 'அசல் தமிழ்ப் பெண்' என்று சொல்ல வேண்டும். என்னவோ என் முன்னோர் செய்த புண்ணியம் தமயந்தி என் மனைவியாக வந்து வாய்த்தாள். இல்லாவிட்டால் இப்படியிருந்து இந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கக் கூடிய மன அமைதி இருக்குமா என்ன?

'என்ன காணும் உது, முன்னோர் செய்த புண்ணியம் என்கிறீர்' என்று ஒருவராவது கேட்பீர்களென்று தெரியும். ஆமாம், எனக்கெல்லாம் எங்கே இருக்கிறது புண்ணியம் பணம்?

அதிகம் சொல்வானேன், 'வாரண்ட் தாறாங்கள் தானே ஒருக்கா கதிர்காமம் போய் வருவமே' என்று தமயந்தியும் எத்தனையோ தடவைகள் கேட்டுவிட்டாள். தடவை என்ன வருடங்கள் என்று சொல்லுங்கள். அவள் கழுத்தில் தாலியைக் கட்டி விளையாட்டைப் போல ஐந்து வருடங்களாகி விட்டன தான். இருந்தாலும்...... ஏன் தான் இந்த வாழ்க்கை இப்படிச் சுடு பிடித்ததாக மாறி வருகிறதோ?

'இஞ்சே பாருங்கோ! நிம்மதியாக ஒருக்கா ஆனையிறவுக்கு அங்காலை எங்கேதான் போனம் நாங்கள். நானென்ன 'எக்ஸிபிஷன்' பாக்கவே கூப்பிடுறன்; ஒருக்கா கதிர்காமத்துக்குத் தானே...' என்று என் இனிய சகதர்மிணி மிளகாய் வைத்துக் கேட்ட போதுதான் எனக்கும் கொஞ்சம் உறைத்தது. மூன்று பிள்ளைகளும் நாங்களும்தானே என்று கதிர்காமக் கந்தனிடம் போவதென்று முடிவு செய்தேன்.

ஆனால் என் மைத்துனனின் உத்தியோக விஷயமாக ஒரு முறை கொழும்புக்குப் போக வேண்டி ஏற்பட்டது. அதுதான் 'உத்தியோகம்' என்று பார்த்தால் அடுத்த மாதமே வேலுப்பிள்ளை அம்மானின் செத்த வீடு. வெள்ளவத்தையில்தான் நடந்தது. போகாமல் முடியுமா? யாழ்ப்பாணத் தவராச்சே.

'இரத்த உறவு அதனால் எல்லாருக்கும் துடக்கு. இம்முறை கதிர்காமம் போகக் கூடாது' கதிர்காமம் போவது இம்முறை இப்படித்தான் தடைப்பட்டது.

'துடக்கு' என்று இல்லாதிருந்தாலும் இருமுறை கொழும்பு போய்வந்ததில் 'யாரம்' காலி என்பதாலும் போயிருக்க இயலாதுதான்.

இவற்றையும் மீறி ஒரு 'அவரும் அவளும்' மூன்று வாரிசுகளுடன் கதிர்காமம் க்ஷேத்திரம் போய்வருவதென்றால் நூற்றி எண்பது ரூபாய் சம்பளத்தில்...... அதை என்ன வார்த்தைகளாற் சொல்ல.

எதற்கோ தொடங்கி இதை ஏன் சொல்லி வந்தேன் என்றால் எல்லாமே 'வாயும் வயிறும்' தான். 'ஒரு வீடும் வாசலும்' என்று இருப்பவர்களுக்கே இப்படியென்றால் பிறருக்கு எப்படியிருக்கும் என்பதற்காகத்தான்.

எதைச் சொல்லி விட்டேன் ...ஓ... மானிப்பாயிலிருந்து போக வேண்டியிருந்ததால் தாவடியூடாகச் செல்லும் எட்டரை மணி 'டபிள்டெக்கரில்' போனால் அலுவலகம் போய்ச் சேர நேரம் சரியாயிருக்கும்.

அந்த எட்டரைமணி பஸ்ஸில் நடராசனை அடிக்கடி சந்திக்கலாம். ஒரு காலத்தைப் பள்ளி நண்பர்கள் நாங்கள். இன்று அவன் ஒரு பஸ் கொண்டக்டர். மாதத்தின் பத்து நாட்களுக்கொருமுறை 'தாவடி லைனில்' தான் நடராசனைக் காணலாம்.

நடராசா மிகவும் நல்லவன். பல கொண்டக்டர்களைப்போல 'வள்' என்று பிரயாணிகள் மீது 'பாயாமல்' பண்போடு பழகுபவன். எஸ்.எஸ்.ஸி. பாஸ் பண்ணியவனல்லவா? பி.ஏ.க்களுக்குக்கூட எதிர்காலம் இனி இ.போ.ச. தான் போலிருக்கிறது.

அரசாங்க நிறுவனங்களிலேயே இன்று இலாபகரமாய் இயங்குவது இ.போ.ச. தானே. அதனை தான் அதுதம் இளைஞர் கூட்டத்திற்கு கற்பகத்தருவாயிருக்கிறது. நானும் கூட ஒரு சிறிது நேரம் பிந்திப் பிறந்திருந்தால் இன்று ஒரு 'கொண்டக்டரா'யத் தான் இருந்திருப்பேனோ என்னவோ?

இ.போ.ச. வில் இலாபமென்றால் அதைக் கேட்பதில் நம்மவர்களுக்கு ஆத்திரம். மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் கூட இப்படித்தானாம். ஏனென்று கேட்டால் 'இதிலே போவது சங்கடம்' என்று கேலி பேசின நாங்கள் தான், இப்ப லாபங்காட்டி நல்ல பஸ்களாகப் போட்டுத் தொலைக்கிறதுகளென்னவாம். இவங்களின்ர கொப்பாட்டன் சொத்தையே கேக்கிறம். மணித்தியாலத்துக்கு ஒரு பஸ் வெண்டாலும் போடுறேன்கிறில்லை உதுக்குள்ளை பீத்தவல் கதை வேறு...' என்கிறார்கள்.

கொஞ்சம் விபரம்தெரிந்தவரென்றால் ஒரு படி உயர வந்து 'வட கிழக்கு மாகாணங்களில் தானுமே பஸ் கொம்பனிக்கு கூடுதல் வருமானம்? பேந்தேன் எங்களுக்கு அதிகம் பஸ் தராயினமாம்' என்று புள்ளி விபரமும் சொல்லத் தொடங்கிவிடுவார்.

அதெல்லாம் என்னவோ எனக்கென்றால் தினமும் அந்த இரட்டைத்தட்டு பஸ் 'டாண்' என்று மணியடித்தது போல வந்து நிற்கும்.

இது நடந்தது நேற்றுமாலை தான். வீட்டிற்கு வரும் போது ஒரு 'தெஸ்பிரே' வாங்கிவரச் சொல்லியிருந்தாள் என் மனைவி. மூன்றாவது பிள்ளைக்குத்தான்.

அதற்காகச் சி.டபிள்யூ.ஈ. யில் தவம் கிடந்து, அந்த 'டின்' எமெரட்டுப் பேரின் 'ஆசீர்வாதத்தைப் பெற்று என்னை வந்தடைய, அப்பப்பா எவ்வளவு நேரமாகிவிட்டது?

'கெதியாய்ப் போய்விடுவோமோ என்று ஓடோடி வந்தும் 'லேன் பஸ்' என்றழைக்கப்படும் ஆனைக்கோட்டை ஊடாக வரும் பஸ்ஸைப் பிடிக்க முடியவில்லை.

தாவடியால் வரும் 'டபிள் டெக்கர்' தான் கிடைத்தது.

ஏறி மேல் தட்டிற்குச் சென்றேன். நடராசாவே தான் கொண்டக்டர்.

நல்ல கூட்டம். தினமும் மாலையில் இப்படித்தான். ஒரே சன நெரிசல். உத்தியோகத்தால் போவோரும், ஆஸ்பத்திரியில் நோயாளரைப் பார்த்துவிட்டு வருவோரும், மாணவ மாணவிகளுமாக ஒரே சனக் கூட்டம்.

டபிள் டெக்கர் ஒரு இடத்தில் நின்று விட்டுப் புறப்படும் போதெல்லாம் 'கஸ்... கஸ்' என்று சீறிக் கொண்டு [illegible] ஓடிக் கொண்டிருந்தது. இந்தத் தாவடி பஸ்ஸே இப்படித்தான். 'இந்த [illegible] ஆய்க்கினை உதுப்படலைக்குப்படலை நிக்கிது?' என்று யாரோ வாய் திறந்தே அலுத்துக் கொண்டார்.

இடையிலே இரண்டு டிக்கட் பரிசோதகர்களும் ஏறிக் கொண்டார்கள்.

நாச்சிமார் கோவிலடி, கொக்குவில், குழப்பிட்டி என்று வந்து தாவடிச் சந்தியிற் திரும்பிவிட்டது பஸ்.

மீண்டும் பஸ் ஓடியது. ஒருவர் மணியடித்தார். பஸ் நின்றது.

'தாவடி டிக்கட் எல்லாம் இறங்குங்கோ'' கீழ் பஸ்ஸிலிருந்த கொண்டக்டர் குரல் கொடுத்தார்.

''டிக்கட் எப்படி இறங்குமாம்'' என்று நகைச்சுவை பேசினார் எனக்கு முன்னாலிருந்த ஒருவர்.

'பத்துச் சத டிக்கட்டெல்லாம் இறங்கிட வேணும்' என்று நடராசாவும் சொன்னான்.

பஸ் ஓடத் தொடங்கியது. திடீரென்று கீழ் பஸ்ஸில் கூச்சல்!

'ஐந்து சதம் எண்டு கேட்டால் தந்திருப்பமே உதுக்கேன் உப்பிடிப் பொய் சொல்லுறாய்...'

'எல்லாம் கள்ளப் புத்தி. பத்துச் சத டிக்கட் எடுத்துப் போட்டு இரண்டு ஹோல்டிங்ஸ் பிந்தி [illegible] இறங்கிறது. என்ன......?'

'கவனிக்காவிட்டால் மானிப்பாய்க்கே வருவாய் போலை...

'எத்தனை பேரை உப்பிடி ஏமாத்தினாய்...

'உவைக்குப் பாத்துப் பாராமல் பைன் பண்ண வேணும்...

'வயது போன காலத்திலை இப்படி செய்தால் முந்தி என்னென்னவெல்லாம் செய்திருப்பாய்...

கீழ் பஸ்ஸிலிருந்த கொண்டக்டர் இப்படிச் சரமாரியாக ஒரு வயோதிப பிரயாணியைத் திட்டிக்கொண்டிருந்தார்.

என்னவென்று பார்ப்பதற்காக நடராசாவும் படிகள் வழியாக இறங்கி — பாதிப்படியிலேயே நின்றான். நானும் எட்டிப் பார்த்தேன்.

டிக்கட் எடுக்காமற் பிரயாணம் செய்த அந்த கிழவர் 'ஏதோ தெரியாமல் தம்பி. எந்த இடத்திலை பஸ் போகுதெண்டே தெரியேல்லை இஞ்ச சதத்துக்கேன் பொய் சொல்லப்போறன்...? என்று சமாதானம் சொன்னார்.

இதைக் கேட்ட கொண்டக்டரின் கோபம் பெருகியது.

'இடம் தெரியாதெண்டோ 'தாவடி' என்டு கத்தின துலைச்சனீ' — இது கொண்டக்டர்.

கொண்டக்டர் புத்தகத்தைத் திறந்து ஒரு டிக்கட்டை எழுதி 'இந்தா! ஐஞ்சு சதம் எடு' என்று நீட்டினார்.

கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது கிழவருக்கு. 'பெரிய இஞ்ச சதத்தைக் கண்டிட்டான்கள்...' அவரும் விட்டேனா பார் என்று ஆரம்பித்துவிட்டார்.

பக்கத்திலிருந்த யாரோ 'என்ன பெரியவர் அதை வாங்கிக்கொண்டு பேசாமலிருங்கள்' என்றார். இது அவரை உற்சாகப்படுத்தத்தான் பயன்பட்டது.

'என்னவோ உந்தக் காக்கிச் சட்டையைப் போட்ட உடனை என்னவோ பெரிய கவர்னர் என்ற நினைப்புத்தான்' என்றார் கிழவர்.

இதைக் கேட்டுக்கொண்டே இதுவரை படியிலேயே நின்றிருந்த நடராசா இரைந்தான். 'சரி! சரி! உனக்குக் கதையாமல் டிக்கட்டைப் பிடியுங்கோ'

'சண்டறியாத டிக்கேற்று உங்கடை சீதனப் பணத்திலேயே கொட்டித் தாறியள்' என்று கிழவர் மீண்டும் கூறியது நடராசாவை பொறுமையிழக்கச் செய்தது.

'சேச்சே! போதும், வாயை பொத்திக்கொண்டு இறங்கிப் போங்கோ' என்ற நடராசாவின் குரலைக் கேட்டு மேலே நிமிர்ந்து பார்த்தான் கிழவன்.

கிழவனின் கண்கள் அகலத் திறந்தன.

அவன் இறங்க வேண்டிய இடமும் வந்தது.

2

நடராசா மீண்டும் மேலே வந்தான். அவனது இரத்த நாளங்களில் இனம் புரியாத உணர்வுகள் பிரவா

(14-ம் பக்கம் பார்க்க)

# பஞ்சாபி பெண்கள் சண்டை போடும் முறை

பஞ்சாபி ஒரு விநோதமான மொழி. வளிதமில்லாத, ஒரு முரட்டு மொழி. அன்பு செலுத்துவதிலும் சரி, திட்டுவதிலும் சரி பஞ்சாபிகளை மிஞ்ச முடியாது. திட்டுக்களெல்லாம் நம்முடைய சகோதரிகள், தாய்மார்களின் நடத்தையை மிகவும் மட்டமான விதத்தில் சித்திரித்துக் காட்டுபவைகளாக இருக்கும்.

பெண்கள் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சண்டை போடும்போதுதான் பஞ்சாபி மொழியின் சிறப்பைப் பார்க்க வேண்டும்! இந்தச் சண்டைகள் தொன்று தொட்டு நிலவி வரும் ஒரு பழக்கம்!

அவர்களுடைய சலிப்பூட்டும் அன்றாட வாழ்க்கை மாமூலிலிருந்து இது ஒரு பொழுது போக்கு.

சாதாரணமாக, பிற்பகலில்தான் சண்டை ஆரம்பமாகும் - அதாவது, பகல் வீட்டு வேலைகள் முடிவடைந்து, மாலை வேலை ஆரம்பமாவதற்கு முன்பு தாக்கும் பெண்மணி அல்லது தாக்குதலுக்கு ஆளானவள் தன் வீட்டின் வாசற்புறத்தில் வந்து நின்று கொண்டு ஒட்டு பிடிப்பதற்காக எதையாவது முணு முணுத்துக் கொண்டிருப்பாள்.

பக்கத்து வீட்டுக்காரியும் வெளியில் வந்து தன் கையில் வசை [illegible] காட்ட ஆரம்பிக்கும் பிரயோகம் இது நீடிக்கும்.

மற்ற வீட்டுப் பெண்களும் தங்களுடைய வேலைகளைப் போட்டது போட்ட படியே போட்டுவிட்டு, வெளியே வேடிக்கைப் பார்க்க வந்து விடுவார்கள். அப்போது தான் சண்டை முறைப்படி தொடங்கும்.

அவ்வளவுதான், பூர்வாங்கத் தாக்குதல்கள் முடிந்து விட்டன. அண்டை வீட்டுக்காரர்களும் வேடிக்கை பார்க்க வந்துவிட்டார்கள். இனிமேல் பின்வாங்குவது என்பதே கிடையாது.

சென்றகால குடும்ப வரலாற்றிலிருந்து மிகவும் நுட்பமான விவரங்களையெல்லாம் பரிமாறிக் கொள்வார்கள். ஆகா, எவ்வளவு அருமையான சொல்லடுக்குகள்! 'ராட்சஸி' 'செத்த குழந்தைகளைத் தின்றவளே!' 'கணவனை விழுங்கியவளே!' 'பிடாரி!' 'நாசமாய் போகிறவளே!' என்றெல்லாம் விதம் விதமான சொல்லம்புகள் பறக்கும்! 'அற்பப் பிணமே!' என்றும் ஏசுவார்கள்.

பஞ்சாபில் 'அற்பம்' என்ற பழிச் சொல் சாட்டுவது மிகவும் பரபரப்பானதாகக் கருதப்படுகிறது. தெருக்களில் பெண்கள் சண்டை போடும்போது பரிமாறிக் கொள்ளும் விஷயங்கள் வாயும் வாழ்க்கையும் [illegible] இருக்கும். ஒளிவு மறைவு இல்லாமல் பாலும் பச்சையாக இருக்கும். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

967 டிசம்பர் மாதம் 16-ந் தேதி

194, ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.
தொலைபேசி எண்:—3411 த. பெ. 1183.


## கண்துடைப்போ தாமதமோ கூடாது

மழையும் புயலும் சேர்ந்து இம்முறை தமிழ்ப் பகுதிகளில் பேயாட்டம் அடியுள்ளன. வட. கிழக்கு மாநிலங்களிலும் தமிழ்ப்பேசும் மக்கள் பெருமளவு வசிக்கும் புத்தளம், சிலாபம் பிரதேசங்களிலும் வெள்ளம் பெரும் சேதங்களை விளைவித்துள்ளது.

சேத விபரங்களைப் பற்றிய செய்திகள் இப்பொழுதுதான் வந்துகொண்டிருக்கின்றன. எல்லாப்பகுதிகளிலும் சுமார் 100 பேர்வரை வெள்ளத்துக்குப் பலியாகியுள்ளனர் என்று நம்பப்படுகிறது.

இலட்சக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களும், பயிர் பச்சைகளும் நாசமாகி விட்டன. ஆயிரக்கணக்கான கால் நடைகள் உயிரிழந்தன. தாய்மார்கள் குழந்தைகளுடன் மரங்கள் மீது ஏறி உயிர் பிழைத்த உள்ளத்தை உருக்கும் செய்திகளும் கிடைத்துள்ளன.

சில கிராமங்கள் இன்னும் நீரால் சூழப்பட்டுள்ளன: மக்கள் பலர் தொடர்ச்சியாக சில நாட்கள் உணவின்றி தவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன சில பகுதிகளில் வாகனப் போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டன. கடற்றொழிலாளர் தொழிலுக்குச் செல்ல முடியவில்லை. அவர்களின் வலை, வள்ளம் முதலியவைகளும் சேதமடைந்தன.

50நாட்களுக்கு முன்புதான் சிலாபம் மாவட்டத்தில் சூறாவளி நாசவேலையை நடத்தியது. மீண்டும் அந்த மக்கள் வெள்ளத்தின் கோரத்தாண்டவத்துக்கு இலக்காகியுள்ளனர்:

யாழ்ப்பாணத்தில் 9நாட்களில் 32அங்குலம் மழைபெய்ததால் அந்த நகரமே ஒரே வெள்ளக்காடாகி விட்டது. வருடம் முழுவதும் பெய்ய வேண்டிய மழை ஒரே வாரத்தில் கொட்டித் தீர்த்துள்ளது. மன்னார் பகுதியைக் கடல் கொள்ளும் நிலையே உருவாகியது, வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளத்தால் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன

குடியிருக்க வீடில்லை—உண்ண உணவில்லை, பயிர்ச் செய்கைகள் அழிந்து விட்டன. தொழில்கள் முடமாகி விட்டன. அடுத்து என்ன?

மக்களின் துன்பங்களையும் ஏற்பட்டுள்ள சேதங்களையும் பார்த்தால் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் தேவைப்படுமென்று சமூக சேவை இலாகாவே கூறுகிறது.

அரசாங்கம் இதுவரை சில இலட்சம் ரூபாய்களை நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கியுள்ளது. இது போதாது என்பது ஒருபுறமிருக்க இந்த நிவாரணம் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சரிவர கிடைப்பதில்லை என்று இப்பொழுதே புகார்கள் கிளம்பி விட்டன.

வடபகுதியில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடு அமைக்க ரூ.400/-வீதம் கொடுப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சர் கூட்டிய ஒருமாநாட்டில் தீர்மானம் செய்யப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப்பணம் முழுவதும் கிடைக்குமா என்பது சந்தேகமே! அதில் சரி பாதியை இடைத்தட்டுக்காரர்கள் விழுங்கிவிடக் கூடும்.

சிலாபம் மாவட்டத்தில் இரு மாதங்களுக்கு முன்னர் சூறாவளியால் வீடிழந்தவர்களுக்கு ரூ. 350/-வீதம் கொடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ரூ. 150, ரூ. 125, ரூ. 175 மட்டுமே அநேகருக்கு வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எஞ்சிய பணத்தை கிராமசேவகர்கள் உட்பட இடையிலுள்ள அதிகாரிகள் பங்கு போட்டுக்கொண்டனராம்.

ஆகவே வெள்ள அகதிகளுக்கு நிவாரணம் அளிக்க முன்வருவதிலும் பார்க்க அந்த நிவாரணங்களைச் சரியாக விநியோகிப்பதுதான் கடினமான பணியாகும்.

நெருக்கடியான வேளையில் மக்களின் துன்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளையடிப்பதற்கு எத்தனையோ பெருச்சாளிகள் தயாராயிருக்கின்றன. அந்த சமூகத் துரோகிகளிடமிருந்து வெள்ள அகதிகளைப் பாதுகாக்க வேண்டியது தேசிய அரசின் கடமையாகும்!

வெள்ளம்பற்றிய செய்தி கிடைத்ததும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வமும், தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகமும், இதர தமிழரசுப் பாராளுமன்றப் பிரதிநிதிகளுடன் வட, கிழக்கு பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, நிலைமையை நேரில் அவதானித்து. மக்களின் துன்பங்களைக் கண்டு, அவர்களுக்கு துரித நிவாரணங்களை அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர். மக்களின் கஷ்டங்களைக் களைய தாமதமின்றி நடவடிக்கை எடுத்ததற்காக அவர்களைப் பாராட்டுகின்றோம்.

பயிர் பச்சைகள் அழிந்து விட்டதால் கமக்காரர்கள் பெரும் துன்பத்துக்காளாகியுள்ளனர். அவர்களின் வெங்காயம், உருளைக்கிழங்கு, வாழைபோன்ற கமச் செய்கைகள் 'இன்ஷ்யூர்' செய்யப்பட்டவை அல்ல. இதன் விளைவாக அவர்கள் எதிர்வரும் சில மாதங்களில் உணவுக்கும் உடைக்கும் பெரிதும் இடர்ப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆதலின் அவர்களுக்குப் போதிய நஷ்டஈடு வழங்குவதுடன், மீண்டும் அதே கமச்செய்கையி லீடுபடுவதற்கான எல்லாவிதமான உதவிகளையும் அரசாங்கம் உடனடியாகச் செய்தல் வேண்டும் இதில் கண்துடைப்போ, தாமதமோ கூடாது.

## தமிழாராய்ச்சி மாநாட்டில் இரியகொல்லைக்கு என்ன வேலை?

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் சென்னையில் நடைபெறும் தமிழாராய்ச்சி மாநாட்டில் விசேட விருந்தினராக கலந்து கொள்ளும்படி தமிழக அரசாங்கத்தின் சார்பில் தமிழக கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இலங்கையின் கல்வியமைச்சர் திரு. இரியகொல்லைக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாகவும், அதில்கலந்து கொள்வதா இல்லையா? என்பதை நமது கல்வியமைச்சர் ஆராய்ந்து வருவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பொருத்தமற்ற ஒருவருக்கு தமிழக கல்வியமைச்சரால் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதே இதுபற்றிய நமது கருத்தாகும்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும்தமிழினத்தின் ஏற்றத்துக்கும் எதிராக கல்வியமைச்சர் எடுத்து வரும் நடவடிக்கைகளையும் திரு. திரு. நெடுஞ்செழியன் ஏலவே சரிவரத் தெரிந்து வைத்திருந்திருப்பாராஞல், இத்தகைய தவறை விட்டிருக்க மாட்டாரென்றே கருதுகிறோம்.

தவளைகளின் மாநாட்டுக்கு எப்படி பாம்புக்கு அழைப்பு விடுப்பது முட்டாள் தனமானதோ, பாம்புகள் மாநாட்டுக்கு கருடனுக்கு அழைப்புவிடுவது எவ்வளவு முட்டாள் தனமானதோ, அத்தகைய தொன்றே தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வரும்படி இலங்கையின் கல்வியமைச்சருக்கு அழைப்பு விடுவதும்.

### தமிழும் தமிழரும்

தமிழாராய்ச்சி மாநாடு, தமிழர்களின் வரலாற்றையும், உலகெங்கும் தமிழைப் பரப்பும் வழி வகைகளையும், ஆராய்வதற்காக நடத்தப்பட்டு வருகிறது. தமிழுக்கு கிடைக்கும் ஒவ்வொரு பெருமையும் தமிழர்களுக்கும்பெருமையே.

தமிழ் மொழியின் சீரையும் சிறப்பையும், தொன்மைப் பெருமைகளையும், ஆராய்ந்து வெற்றி கண்டால், அந்த வெற்றியால் தமிழுக்கு கிடைக்கும் புகழ் தமிழ்பேசும் மக்களுக்கு கிடைக்கின்ற புகழ் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், தமிழின் வாழ்வும், தமிழர் வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தது.

தமிழ்மொழியின் வரலாற்றையும், தமிழர்களின் வரலாற்றையும், ஆராயும் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு தமிழக அரசாங்கத்தால் அழைக்கப்பட்டிருக்கும் நம்முடைய கல்வியமைச்சர் இலங்கையிலுள்ள தமிழர்கள் மீது எவ்வளவு தூரம் 'பாசம்' கொண்டுள்ளார் என்பதை நாம் புட்டு வைக்க வேண்டியதில்லை.

### வேறுக்க திட்டம் போட்டார்

தேசிய அரசாங்கத்திலிருந்து கொண்டே நமது கல்வியமைச்சர் எடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தமிழ் மொழியினதும் தமிழ் இனத்தினதும் நலன்களுக்கு மாறுனதாகவே இருக்கின்றன.

தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பி தமிழ்ப் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தை திணிக்க ஆரம்பத்தில் திட்டம் போட்டார் திரு. இரியகொல்லை.

தமிழரசுக் கட்சியின் வலிமையான எதிர்ப்பினுல் அத்தீய திட்டம் தவிடுபொடியாக்கப்பட்டது.

### சுதந்திரன் அரசியல் நிருபர்

நாட்டிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளும் தமிழ் வகுப்புக்களும் ஒவ்வொன்ருக மூடுவிழா நடத்தப்படுகின்றன கல்வித் திணைக்களத்தால்.

தமிழ்ப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் வழங்கவும் விஞ்ஞான கூடங்கள் கட்டித்தரவும் தடை போட்டார். நமது கல்வி அமைச்சர் இதற்கு பொருமை கலந்த விளக்கம் வேறு அளித்தார்.

'சிங்களவர்களை விடத்தமிழர்களுக்கு பாடசாலைகள் அதிகம் உள்ளன. அதனுல் படித்து முன்னேறி விடுகிருர்கள். ஆகவே சிங்களப்பகுதியிலே போதுமான விஞ்ஞானப்பாடசாலைகள் தோன்றும்மட்டும் தமிழ்ப்பகுதிக்கு விஞ்ஞான கூடங்கள் நிறுவித்தர மாட்டேன்' என்ற சாரப்பட விளக்கம் அளித்தார்.

தமிழ்ப் பாடசாலைகளிருந்து விஞ்ஞானப்பட்டதாரிகளை இடமாற்றம் செய்ய உத்தரவு பிறப்பித்தார்.

தமிழர்கள் தங்கள் தாய் மொழியில் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியூட்டும் உரிமையை அபகரிக்கச் சூழ்ச்சி செய்தார்.

### மலையகத் தமிழரின் கோரிக்கை அலட்சியம்

தமது வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி இந்த நாட்டை பொன் கொழிக்கும் பூமியாக்கிய இந்திய வம்சாவளியினரின் பிள்ளைகளுக்கு ஒழுங்கான கல்வி கிடைப்பதற்கு வகை செய்யும் முறையில், தோட்டப்பாடசாலைகளை தேசியமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அலட்சியப்படுத்தினர்.

தமிழை அழிக்கவும் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கவும் விரும்பும் இத்தகைய ஒருவருக்குத் தமிழின் உயர்ச்சியையே தம் உயிர் மூச்சாகக் கொண்டு தமிழ் வளர்ச்சிக்காய் உழைத்து வரும் தமிழக கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அழைப்பு அனுப்பி இருப்பது இந்நாட்டு தமிழ்ப் பேசும் மக்களுக்குஅதிர்ச்சியையும், கசப்பையும் ஏற்படுத்தியுள்ளதென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேம்.

இருந்தபோதிலும், நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல ஏலவே சரிவர திரு. நெடுஞ்செழியன் இதை புரிந்து கொண்டிருப்பாராஞல், இத்தகைய ஒரு தவறை விட்டிருக்கமாட்டாரென்பது நமது திடமான துணிபு.

---

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உணவுப் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறிவிட்டன. மன்னார்ப் பகுதியில் ஒரு முத்தல் பான் 90 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற செய்தியை கேட்டு நாம் அதிர்ச்சி அடைந்துவிட்டோம். அரிசி விலையோ யானைவிலை குதிரை விலையாகிவிட்டது. இதர அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகளும் ஏழை எளியவர்களால் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு உயரே ஏறிவிட்டன.

ரூபாய் மதிப்புக் குறைந்ததால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சுமார் 30% ஏற்கனவே உயர்ந்திருந்தன—இப்பொழுது வெள்ளத்தாலும் விலைகள் ஏறிவிட்டதால் மக்கள் படும் துன்பங்கள் சொல்லிலடங்கா. எனவே தேசிய அரசு துரித நடவடிக்கை எடுத்து விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மக்களைக் கொள்ளை இலாபக்காரர்களின் தயவில் [illegible]

---

### வடக்கு........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடிக்கடி இப்படி வெள்ளத்தினுல் பெருஞ்சேத மேற்பட்டுவருவதும், அப்போதைக்கப்போது அரசாங்கம் தற்காலிக நிவாரணம் அளித்து வருவதும் வழக்கமாகிவிட்டது.

எதிர்காலத்தில் வெள்ளத்தினுல் விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்க தற்காலிக நிவாரணம் மட்டும் போதாதென்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தர வெள்ளத்தடுப்பு திட்டமொன்று உருவாக்கப்பட்டு கூட்டோடு கூடாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் தமிழரசு எம். பி, யொருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இதற்கான திட்டத்தை வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழரசு எம். பீக்கள் அனைவரும் கூடிப்பேசி உருவாக்குவர் என்றும், அத்திட்டம் உடனடியாக பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளத் தடுப்புக்கான நிரந்தர திட்டத்தை உடன் நிறைவேற்றும்படி தமிழரசு எம். பீ.க்கள் பிரதமரிடம் வலியுறுத்துவர் என்றும், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதும், வெள்ளத்தினுல் ஏற்படும் சேதங்கள் பெருமளவு குறையுமென்றும் ஒரு தமிழரசு எம். பி. குறிப்பிட்டார்.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் தேங்கியுள்ள வெள்ளம் சுலபமாக வெளியேறுவதற்கு உதவி செய்யுமுகமாக யாழ்ப்பாணத்திலுள்ள சகல வாய்க்கால்களையும் துப்பரவு செய்ய உடன் நடவடிக்கையெடுக்கும்படி யாழ். மாநகர சபையின் விசேட கமிஷனர்களுக்கு மந்திரி 'திரு' உத்தரவிட்டுள்ளார்.

---

### கொஸ்கம......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடவும் கல்வி இலாகா அறிவித்திருக்கிறதாம். இப்பகுதியில் வாழும் அனேக தோட்ட தொழிலாளர்கள் இ. தொ. கழகத்தின் பன்விலை மாவட்டக் கிளையில் அங்கம் வகிக்கிருர்கள்.

'இப்பகுதியைச் சுற்றி 10 மைல் தூரத்திற்கு இப்பாடசாலையைத் தவிர வேறு தனித் தமிழ் பாடசாலை இல்லாதபடியால், இப்பாடசாலையிலுள்ள தமிழ் பிரிவையும் கல்வி இலாகா மூடி விட்டால், இப்பகுதியில் வாழும் தமிழ் மக்களின் பிள்ளைகள் கல்வியின்றி அவதியுறுவார்கள். இது பற்றி தோட்டமக்கள் எங்களுக்கு அடிக்கடி புகார் செய்துள்ளனர்.

எனவே இது பற்றி உடனடியாக தாங்கள் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரஜாவுரிமை பெற தேடிவைத்திருக்க வேண்டிய ஆதாரங்கள் எவை?

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்தால் அவைபற்றிய விபரங்கள்.

3. அது சம்பந்தமான கோர்ட் நடவடிக்கை பற்றிய குறிப்புகள் இருந்தால் அவை.

15-11-48க்கு முன்பத்துவருடங்கள் இலங்கையில் வாழ்ந்திருந்து, இந்திய, பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே விண்ணப்பித்திருந்து, அப்படி விண்ணப்பித்ததை மேற்கண்ட ஆதாரம் காட்டி நிரூபிக்க முடியாதவர்கள், சத்தியக்கடுதாசியொன்று சமர்ப்பிப்பதின் மூலம், தாம் விண்ணப்பம் அனுப்பியதை ஊர்ஜிதம் செய்யலாம்.

இலங்கையரை மணந்த இந்திய வம்சாவளியினர் பின்வரும் தஸ்தாவேஜுகளை தயாராக வைத்திருக்கவேண்டும்.

1. திருமண அத்தாட்சிப்பத்திரம்.

2. மனைவி அல்லது கணவன் இலங்கைப் பிரஜையென்பதை நிரூபிப்பதற்கு வேண்டிய பிறப்பு சாட்சிபத்திரம்.

3. பிள்ளைகள் இருந்தால், பிள்ளைகளுடைய பிறப்புசாட்சிப்பத்திரம்.

4. முதலில் கூறப்பட்டபடி 1948க்கு பின் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்ததற்குரிய அத்தாட்சிகள்.

5. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே இலங்கையில் பதிவுப் பிரஜையாவதற்கு விண்ணப்பித்திருந்தால், அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, அது சம்பந்தமான கடிதத்தொடர்புகள்பற்றிய விபரங்கள், கோர்ட் நடவடிக்கை ஏதாவது நடந்திருந்தால் அதுபற்றிய விபரங்கள்.

இரண்டு தலைமுறைகளாக இலங்கையில் பிறந்தும் அதை நிரூபிக்க முடியாதவர்கள்—இவர்கள் தேடி வைத்துக் கொள்ள வேண்டிய ஆதாரங்கள் வருமாறு:-

1. தந்தை, மகன், இருவரின் பிறப்புச்சாட்சிப் பத்திரங்களில் ஒன்ருவது இருந்தால் அது.

2. விண்ணப்பதாரரும், அவரின் தந்தையும் இலங்கையில் பிறந்ததை அறிந்தவர்கள் இருந்தால், அவர்கள் மூலம் சத்தியக்கடுதாசி முடிக்கலாம்.

3. தந்தை, மகன், இருவரும் இலங்கையில் தொடர்ந்து வசித்ததற்கான சான்றுகள். வேலை செய்த விபரம், தங்கியிருந்த இடம் ஆகியவற்றுக்கான விபரம்.

4. நிரந்தரச் சொத்துப்பற்றிய விபரங்கள்.

இலங்கையின் வம்சாவழிப்பிரஜையான தாய்க்கும் இந்தியவம்சாவழியினரான தந்தைக்கும் பிறந்தவர்கள் சேகரித்துவைக்க வேண்டிய ஆதாரங்கள்:-

1. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்தால், விண்ணப்பமனுவின் பிரதி.

2. தாயாருடைய பிறப்பத்தாட்சிப்பத்திரம்.

3. 15-11-48க்கு முன் தொடர்ச்சியாக இலங்கையில் வசித்ததற்கான ஆதாரங்கள்.

4. திருமணம் செய்திருந்தால், திருமண அத்தாட்சிப் பத்திரம்.

15-11-48க்கு முன் இலங்கையில் பிறந்தவர்கள்—பின்வரும் ஆதாரங்களைத் தேடி வைத்துக் கொள்ளவேண்டும்.

1. பிறப்பத்தாட்சிப் பத்திரம்.

2. தொடர்ந்து இலங்கையில் வாழ்ந்து வருவதற்கான நிருபணம் (முதலில் குறிப்பிடப்பட்டவை).

15-11-48 லிருந்து தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்து வருபவர்கள், ஆரம்பத்தில் கூறியபடி இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்து வருவதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத் தேடி வைத்துக்கொள்ளவேண்டும்.

—தொடரும்.

## அடுத்த வாரம்

- ★ ஜீ ஜீ.க்கும் சிவசிதம்பரத்துக்கும் தகராறு மூளை விட்ட கதை!
- ★ வெங்காய வழக்கும் பொ. கட்சி கூட்டமும்!
- ★ இலங்கைப் பிரஜாவுரிமை பெற தேவையான அத்தாட்சிப்பத்திரங்களை எப்படிப் பெறுவது?
- ★ 1968 சனவரி 30ல் அரசாங்கத்திலிருந்து விலகுவது யார்? -சிவசிதம்பரத்தின்கேள்வி
- ★ டி. பி. சுபசிங்காவுக்கு பண்டிதர் இரத்தினம் சூடு!

## குளோரின் அடிக்க மந்திரி உத்தரவு

வடபகுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் கிணறுகளிலும், குளங்களிலும் அசுத்த நீர் தேங்கியுள்ளதன் காரணமாக தொற்று நோய் ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளது. இதைத்தடுக்கும் வகையில் சகல கிணறுகளுக்கும், குளங்களுக்கும் குளோறின் உடனடியாக அடிக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி கமிஷனருக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவசர உத்தரவு ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இதற்கு போதியளவு குளோறின் கிடைக்காத பட்சத்தில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து குளோறின் பெற நடவடிக்கையெடுக்குமாறும் திரு. திருச்செல்வம் ஆலோசனை கூறியுள்ளார்.


## புதிய பாணியில் தொடர் நவீனம்!

- புதிய பாணியில் எழுதப்பட்ட தொடர் நவீனம்!!
- இலங்கையில் இதுவரை வெளிவராத புதிய கோணத்திலிருந்து படைக்கப்பட்ட மர்ம நாவல்!
- அத்தியாயத்துக்கு அத்தியாயம் திகிலும் பரபரப்புமான சம்பவங்கள் நிறைந்தது!
- ஒவ்வொரு வாரமும் அடுத்து எப்போது வரும் என்று உங்களை ஆவலுடன் காக்க வைக்கும்!

## 'இரத்தப் பிசாசு'

சுதந்திரனில் வாசிக்கத் தவருதீர்கள்!



பவரின்

காய்கறிப் போரை



ஏ. பவர்



## 'மெய்கண்டான்' வழங்கும்

## ரூ-1000-00

### பெறுமதியான 168 பரிசுகள்

**சித்திர கலா —** என்ற சொல்லில் சித்திரமும் கலையும் பிணைந்திருக்கின்றன. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றொரு புதிய கலண்டரான சித்திரகலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

**குருபரன் —** என்ற பதத்தில் லீலா விநோதனை பரனுக்குக் குருவாகிய குமரன் என்ற பொருள் பொதிந்திருக்கிறது. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றுமொரு சிறிய சைஸ் பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

தமிழுலகில் முதன் முதல் சித்திர சகிதமான திருக்குறட் கலண்டர்களை வெளியிட்டு வெற்றிகரமாக விற்பனை செய்து வருபவர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

மெய்கண்டான் திருக்குறட் கலண்டரில் சமய ஞானிகள், உத்தமப் பெரியார்கள் தெய்வப் புலவர்கள், தேசத் தியாகிகள் போன்ருேரின் சித்திரங்களே இடம்பெற்று வருகின்றன. அறிஞர்களின், பெரியோர்களின், பிரமுகர்களின் தரத்திற்கேற்பவே மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்களில் படங்கள் பொறிக்கப்படுகின்றன.

இது தவிர

முழுக்க முழுக்க, பக்கத்துக்குப் பக்கம், சித்திரங்களைக் கொண்ட (நம்பர் 2, நம்பர் 3) தனிச் சித்திரக் கலண்டர்களாக மலிவு விலையில், இரண்டு புதிய கலண்டர்களையும் இவ்வாண்டு முதல் வெளியிடுகிருர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

விபரங்களைத் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? இப்போது இங்கு தரப்படும் வினவுக்கு ஏற்ற விடையைத் தெரிந்தனுப்பி பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

வினு: ''சித்திர கலா'' — ''குருபரன்'' என்ற அழகிய சொற்களை மெய்கண்டான் ஸ்தாபனத்தார் பிரயோகித்தால் அவை எதைக் குறிக்கும்?

கீழே தரப்பட்டிருக்கும் 6 விடைகளில் பொருத்தமான 2 விடைகளை ஒரு போஸ்கார்ட்டில் எழுதி அனுப்பிவையுங்கள்.

விடை 1. சித்திர கலா — ஒரு நடிகையின் பெயர்.

விடை 2. சித்திர கலா — ஒரு நடன மன்றத்தின் பெயர்.

விடை 3. சித்திர கலா — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய பெரிய 'சைஸ்' கலண்டரின் பெயர்.

விடை 4. குருபரன் — பழனி முருகனின் திருப்பெயர்.

விடை 5. குருபரன் — ஒரு தமிழ்ப் பத்திரிகையின் பெயர்.

விடை 6. குருபரன் — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய சிறிய 'சைஸ்' மலிவு விலைக் கலண்டரின் பெயர்.

## பரிசு விவரங்கள்

1-ம் பரிசு ரூ. 100-00 ரொக்கம்
2-ம் பரிசு ரூ. 50-00 ரொக்கம்
3-ம் பரிசு ரூ. 25-00 ரொக்கம்

மற்றும் 165 பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபா 5/- பெறுமதியான பொருட்கள்

சரியான விடை அனுப்புபவர்களின் பெயர்கள் குலுக்கி எடுத்துப் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுபவர் விவரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

மெய்கண்டான் பிரஸ் லிமிட்
161, செட்டியார் தெரு,
தொலைபேசி: 79141
கொழும்பு - 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலத்துக்கு கொடுக்கும் மதிப்பைக் கூட தமிழ் மொழிக்கு கொடுக்க மறுப்பதேன்?

பாதுகாப்பு வெளிநாட்டமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிலும், அரசாங்க சேவை ஆணைக் குழுவிலும் நடக்கும் தமிழ் புறக்கணிப்பை ஆட்சேபித்து கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பாதுகாப்பு வெளி நாட்டமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. ஜி. வி. பி சமரசிங்காவுக்கும், அரசாங்க சேவை ஆணைக் குழுத் தலைவருக்கும் கடிதமெழுதியுள்ளார்.

## புதிதாக சேரும் ஊழியர்களுக்கு நியமனக்கடிதமும் சிங்களத்திலா?

### பண்டிதர் இரத்தினம் கண்டனம்

பாதுகாப்பு வெளிநாட்டமைச்சின் நிரந்தர செயலாளர், திரு. ஜி. வி. பி. சமரசிங்காவுக்கு திரு. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:—

உங்கள் அமைச்சும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களும் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்கள் 1966 ஐயும் நிறைவேற்றுச் சுற்றறிக்கை 686 ஐயும் முறைக நடைமுறைப்படுத்தப்படாமை கவலைக்குரியது.

அரசாங்க வர்த்தமானியின் வெளியிடப்படும் உங்கள் அமைச்சின் அறிவித்தல்கள் பல தமிழிலும் வெளியிடப்படுவதில்லை என மக்கள் ஓயாது முறையிடுகின்றனர். உதாரணத்திற்கு 17-11-67 ஆம் திகதியையும் 14775 ஆம் எண்ணையுமுடைய அரசாங்க வர்த்தமானியை நோக்குக. 401/9968, 402/1967 ஆம் 5-11-67 ஆம் திகதியையும் கொண்ட அறிவிப்புகள் தமிழில் வெளியிடப்படவில்லை.

கார் சுட்டுத் துண்டுகளில்...

2 உங்கள் அமைச்சு பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பொதுமக்களுக்கு அனுப்பும் அழைப்புக்கள் மும்மொழியிலுமுள வெனினும் அவற்றுடன் அனுப்பப்படும் கார் சுட்டுத் துண்டுகளில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. உங்கள் அமைச்சு எனக்கு அனுப்பிய கார்ச் சுட்டுத்துண்டை இத்துடன் உங்கள் பார்வைக்காக இணைத்துள்ளேன். ஆங்கிலத்துக்குக் கொடுக்கும் மதிப்பைக்கூடத் தமிழுக்குக் கொடுக்க மறுக்கின்றீர்கள்.

3. அரசாங்க செய்தித் திணைக்களம் வெளியிடும் பல வெளியீடுகளிலே தமிழ் ஒதுக்கப்படுகின்றது. அழைப்பிதழிற்கூடத் தமிழ் புறக்கணிக்கப்பட்டதை முன்னர் நான் பிரதம அமைச்சருக்குச் சுட்டிக் காட்டி எழுதியுள்ளேன்.



4. எனவே, இனிமேலாகுதல் தமிழைப் புறக்கணிக்காமல் ஏனைய அமைச்சர்களுக்கு வழி காட்டியாக உங்கள் அமைச்சு செயற்படுமா என்பதை அறிவிக்குக.

#### வர்த்தமானி அறிவித்தல்கள்

அரசாங்க சேவை ஆணைக்குழுத்தலைவருக்கு திரு. இரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது;—

உங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடும் அறிவித்தல்கள் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்கள் 1966க்கு அமையத் தமிழிலும் வெளியிடப்படாமை கவலைக்குரியது.

இதுபற்றி நான் 14-9-67-ல் உங்கள் செயலாளருக்கு எழுதினேன். இன்றுவரை தமிழ்ப் புறக்கணிப்பைக் கைவிட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. இதனால் இதனை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொணர்கின்றேன்.

#### நியமனக் கடிதங்கள் சிங்களத்திலா?

தமிழ்மூலம் கல்விகற்று அரசாங்க சேவையிலே புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் மூன்றாண்டுக்குள் சிங்களத் தேர்ச்சி பெறல் வேண்டுமென்பது நிபந்தனை. எனவே இவர்கள் முதலில் நியமனம் பெறும் பொழுது பெரும்பாலும் சிங்களம் தெரியாதவர்களாகவே யுள்ளர். இவர்களுக்கு நியமனக் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்படுவதாக முறையீடுகள் செய்யப்படுகின்றன. இதனையும் கவனித்து இவர்கள் நியமனத்தில் உறுதி பெறும்வரை இவர்களுக்கு உங்கள் ஆணைக்குழு அனுப்பும் நியமனக் கடிதம் முதலியவற்றைத் தமிழிலும் அனுப்ப ஆவன செய்க.

3. உங்கள் ஆணைக் குழுவின் கடித இதழ் முகப்பிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஏனைய திணைக்களங்களின் அமைச்சுக்களைப் போலத் தமிழையும் உங்கள் கடித இதழ் முகப்பில் சேர்க்குமாறு பணிக்குக.

---

## மக்கள் குரல்

### மந்திரி திருச்செல்வம் நடவடிக்கை எடுப்பாரா?

மார்ட்டின் கமிஷன் அறிக்கையைப் பிரதமர் ஆதரிப்பதாகக் கடந்த வார சுதந்திரனில் டாக்டர் நாகநாதன் அளித்த பேட்டிமூலம் தெரிந்து கொண்டோம்.

ஆனால், திரு. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் தனது ஆதரவாளர்களிடம் காட்டிய புதிய வட்டார வரைப்படத்தில், திரு. துரையப்பாவுக்காக முன்பு ஒதுக்கப்பட்ட கொய்யாத்தோட்டம் வட்டாரம் காணப்படுகிறது.

கொய்யாத்தோட்டம் வட்டாரம் பிறந்ததே நேர்மையான முறையிலல்ல. மார்ட்டின் கமிஷன் அறிக்கை மூலம் இத்தவறு திருத்தப்படும் என்று நினைத்திருந்தோம். ஆனால் மீண்டும் பழைய குருட்டுக் கதவைத் திறவடி என்ற கதையா?

கொய்யாத்தோட்டம் வட்டாரம் மீண்டும் புகுத்தப்படுவதற்கு உள்ளூராட்சி அமைச்சிலுள்ள ஒரு உயர்தர அதிகாரியே காரணம் என்று கூறப்படுகிறது.

ஆகவே இது குறித்து உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

செ. தியாகராசா
மு. தர்மலிங்கம்
யாழ்ப்பாணம்.

### அநியாய வட்டி!

கொழும்பில் நகை அடவு பிடிப்பவர் சட்டப்படி ரூபாவுக்கு ஒரு சதம் வீதம்தான் வட்டி அறவிட வேண்டும். அவர்கள் ரசீதும் பற்றுச் சீட்டின் பற்றிலும் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் அடவு வைப்போரிடம் ரூபாவுக்கு 3 சத வீதம் வட்டி அறவிடுகிறார்கள்.

இந்த அநியாய வட்டி வசூல் பல காலமாக நடந்து வருகிறது. இதை அரசாங்கமும் கவனிப்பதாயில்லை.

இந்த நிலையில் நஷ்டமடையும் அடவுக்கு நகையை வைப்பவரை காப்பாற்றுவது யார்?

அந்த பாமர ஏழைகளைக் கொள்ளையடிக்கும் அடகு பிடிப்போரிடமிருந்து காப்பாற்ற உடனடியாக அரசாங்கம் ஆவன செய்யுமா?

அடவு நகைக்கு அதிக வட்டிக் கொடுத்த ஓர் ஏழை.
கொழும்பு 13.

---

## கிளிநொச்சி ப. சபை தேர்தலில் தமிழரசு போட்டியிடுவதேன்?

தமிழ் பேசும் மக்களின் தலைநகராக வளர்ந்து வரும் கிளிநொச்சி எதிர் வருகின்ற 1-1-68ல், பட்டினசபையாக தரம் உயர்த்தப்படுகின்றது. பட்டினசபைக்கு அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 4-12-67ல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சிப்பட்டின சபையின் முதலாவது தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 5-ம் திகதி தாக்கல் செய்யப்பட்டன. ஏழு வட்டாரங்களிலும் தமிழரசுக்கட்சி, கட்சி சார்பில் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது.

கிளிநொச்சிப் பட்டின சபை உருவானவரலாற்றையும், தமிழரசுக்கட்சி, கட்சிரீதியில் போட்டியிடும் காரணத்தையும் இக்கட்டுரையில் கிளிநொச்சிதொகுதி தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. மு. சுப்பிரமணியம் விளக்குகிறார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களைப்போலல்லாமல் இத்தேர்தல் பொதுமக்களின் கவனத்தையும் அரசியல் கட்சிகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. கிளிநொச்சியில் நடைபெறும் பட்டின சபைத் தேர்தலில், தமிழரசுக் கட்சி நேரடியாகவே போட்டி போடுகின்றது.

1956ம் ஆண்டிலிருந்தே கிளிநொச்சியின் உள்ளூராட்சி மன்றமாக இருந்த கரைச்சி கிராமசபையில், அரசியல் புகுந்து கொண்டது. அன்றிலிருந்த இன்றுவரை இக்கிராமசபையில் அரசியலும் சேர்ந்தே இயங்கி வருகின்றது.

#### கட்சி மாறினர்

கரைச்சி கிராமசபைக்கு நடைபெற்ற சென்ற தேர்தலின் பின் தமிழரசுக் கூட்டில் வந்தது பொதுமக்களுக்கு பெரும் அதிர்ச்சியளித்தது.

தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் என்று கூறி கிராம சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய, தட்டுவன் கொட்டி, முரசுமோட்டை வடக்கு, பரந்தன், கண்டாவளை, வட்டக்கச்சி, பரவிப்பாஞ்சான் ஆகிய

**மு. சுப்பிரமணியம்,**
தலைவர், கிளிநொச்சி த. வா. மு.

கட்சியின் ஆதரவாளர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்டு தேர்தலில் வெற்றி பெற்றவர்கள், எதிர்வரிசை [illegible] வட்டாரங்களின் அங்கத்தவர்கள் தமிழரசுக் கட்சிக்கு எதிராக கிராமசபைத் தலைவர் தேர்வில் வாக்களித்தனர். இதனால் மக்களை ஏமாற்றிக் காங்கிரசுக்கு முண்டு கொடுத்த கிராமசபை உறுப்பினர்கள் மக்களின் மதிப்பை இழந்தனர். மக்கள் மதிக்கவில்லை.

தமிழரசுக் கட்சிக்கு எதிராக வாக்களித்த சில உறுப்பினர்களுக்கு எதிராக சத்தியாக்கிரக சம்பவமும் இடம்பெற்றது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை கூடி தொடர்ந்துவரும் எல்லா விதமான தேர்தல்களிலும் கட்சிமுறையில் போட்டியிடுவதெனத் தீர்மானித்தது.

வளர்ந்து வரும் கிளிநொச்சிக்கு ஓர் பட்டினம் தேவை என்பதை எவரும், எச்சமயத்திலும் மறுக்க மாட்டார்கள். புதிய அரசு உருவாகியதைத் தொடர்ந்து எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்தின் பெரு முயற்சியால் பல அரசாங்க அலுவலகங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின.

#### பட்டினசபை வந்த விதம்

வளர்ந்து வருகின்ற கிளிநொச்சிக்குப் 'பட்டினம்' தேவை என்று, கிளிநொச்சியிலிருக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்கள், பொருளாதார அபிவிருத்திச் சங்கங்கள், வர்த்தக சங்கம், தமிழரசுக் கட்சி, முன்னைய பாராளுமன்ற உறுப்பினர், திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. அவர்கள் வரியிறுப்பாளர் சங்கம் ஆகியன கோரின.

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஆனந்தசங்கரி தனது சொந்த [illegible] தை மேற்கொண்டு இதை வ[illegible]

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் மனைவிக்கிடையில்

குடும்ப வாழ்வில் கணவனுக்கோ அன்றி மனைவிக்கோ என்று தனி இரகசியம் இருக்க முடியாது - இருக்கக் கூடாது. கணவனாகட்டும், மனைவியாகட்டும் சிந்தனை, சொல, செயல் ஆகிய மூன்றிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

கணவன் அல்லது மனைவி ஏதாவது ஒரு நேரத்தில் யார் மீதாவது கோபமோ ஆத்திரமோ அடைந்திருந்தால் கூட அதை வெளிப்படையாக போட்டு உடைத்துவிட வேண்டுமே தவிர மனத்திற்குள் அடக்கி வைத்திருக்கக் கூடாது.

இது குடும்ப வாழ்வில் பொதுவான நியதி.

ஆனால் இங்கே நாம் சொல்ல இருக்கும் ஒரு விநோதமான ஆலோசனை என்னவென்றால்,

> கணவன் மனைவிக்கிடையில் ஒளிவு மறைவு இன்றியிருந்தால்தான் வாழ்க்கை மகிழ்ச்சியுடன் செல்லும். ஆனால் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் ஒளிவு மறைவு இருக்கவேண்டுமெனகிறார் இக்கட்டுரை ஆசிரியர். இதுபற்றி உங்களுக்கு மாறுபட்ட கருத்திருந்தால் எழுதுங்கள்.

தாலும் இவர்கள் வாழ்க்கையை இழந்துவிடுவதில்லை; வேறு யாரையாவது மணக்கின்றனர். அந்த திருமணம், அவர்கள் வாழ்வில் நறுமணத்தை ஊட்டிவிடுகிறது.

அங்கேயே நிலைமை இப்படி என்றால் இங்கே கேட்கவேண்டுமா?

காதல் என்ற அளவுக்குப் போகவேண்டியதில்லை.

மணமான பின் ஒரு பெண், இளைஞன் ஒருவனைக் குறிப்பிட்டு இவன் எனக்கு அறிமுகமானவன் என்று கூறினால்கூட ஆண்களின் மனது வாடி அநுவருப்பு நிலைத்துவிடுகிறது.

மனைவி என்பவள் முற்றிலும் தனக்கே உரிய ஒருத்தி என்று அவள் மனதோடு ஒட்டிவிட முயலும் ஆண்கள், அவள் தனக்கு மட்டும் உரியவளாக இருக்கவில்லை என்ற உண்மையைக் கொடுக்கும் அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தடுமாறிவிடுகிறார்கள்.

திருமணத்திற்கு முன்பு ஒரு பெண் எப்படியும் வாழ்ந்திருக்க முடியும் என்ற விஷ

# ஒளிவு மறைவு

மேற்கண்ட பொது நியதியிலிருந்து ஒரே ஒரு விஷயத்திற்கு மட்டும் விலக்கு இருக்க வேண்டும் என்பதுதான்.

அதாவது. கணவன் அல்லது மனைவி, அவசியம் என்று தோன்றும்போது சில விஷயங்களை தங்கள் மனத்திற்குள் போட்டு புதைத்துவைத்திருக்க வேண்டும்.

குடும்ப வாழ்வின் இன்பம் சிதறிச் சிதறியாமல் இருப்பதற்குத்தான் இந்த ஆலோசனை.

என்ன விஷயம்? ஏன் அப்படி?

திருமணத்திற்கு முன்பு ஆணோ, பெண்ணோ தவிர்க்க இயலாத சில அனுபவங்களுக்கு இலக்காகியிருப்பார்கள்.

இதற்கு முன் வாழ்க்கையில் சந்தித்தே இராத ஆணும் பெண்ணும் மணவாழ்வின் மூலம் இணையப்பெற்று வாழ்க்கைப் பாதையினைக் கடக்க முற்படுகின்றனர்.

## மறைக்க வேண்டும்

இந்நிலையில் ஆணாகட்டும் பெண்ணாகட்டும் தங்களுடைய முன்னுள வாழ்க்கையைப்

## மறைமுதல்வன்

பற்றி மறந்துவிடுவது மட்டுமன்றி மறைத்தும் விட வேண்டியது அவசியமாகும்.

இந்த விஷயத்தில் கட்டாயம் ஒளிவு — மறைவு வேண்டும். இது இல்லாவிடில் குடும்பத்தில் இன்பம் கிட்டாத பொருளாகி வாழ்க்கை நிம்மதியற்ற சுமையாகிவிடும்.

யத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டுதான் எந்தவொரு ஆடவனும் மனைவியின் கரத்தைப் பற்றுகிறான். இதற்கு முன்பு எப்படியிருந்தாலும் இனி தன்னிடம் பற்றும் பாசமும் கொண்டு நம்பிக்கையோடு மனைவி வாழ வேண்டும் என்பதுதான் மணவாழ்வில் ஈடுபடும் ஒவ்வொரு ஆடவனின் விருப்பமும்.

ஆனால் பெண்ணுடைய முன்னுளைய வாழ்க்கையைப் பற்றிய சிறு உண்மை ஆடவனின் கண்ணில் பட்டாலும் அதனால் அவன் அடையும் அதிர்ச்சி வாழ்க்கையில் பிறகு எப்போதுமே நீங்குவதில்லை.

தன் மனைவியை திருமணத்திற்குமுன் ஒரு இளைஞன் காதலித்தான் என்றுகூட வேண்டாம், தன் மனைவியுடன் ஒரு

# இருக்க வேண்டும்

ஆண், அல்லது பெண் திருமணத்திற்கு முன்பு காலத்தவயப்பட்டிருக்கக் கூடும்.

காதலின் அளவு ஏறத்தாழ இருக்கலாம்.

பலர் தீவிரமான காதலில் மூழ்கித் திளைத்திருக்கலாம்.

சிலர் தெய்வீகக் காதல் என்பார்களே அப்படி பட்டும் படாததுமாக காதல் அனுபவம் பெற்றிருக்கலாம்.

வேறு சிலர் கண்ணோடு கண்ணினை நோக்குவதோடு மட்டும் நின்றுவிட்டிருக்கக்கூடும்.

மற்றும் சிலர் 'காதல்' என்று சொல்ல முடியாமல் ஏதோ ஒரு பாசத்தோடு அன்போடு - பழகும் வாய்ப்பினைப் பெற்றிருக்கலாம்.

அதிர்ஷ்டக்காரர்களான சிலர் மனம்போல 'மணம்' பெறுகின்றனர். பெரும்பான்மையினர் நிலை 'இழந்த காதல்' ஆகிவிடுகிறது. காதலை இழந்

திருமணத்துக்கு முன் ஆண்கள் கொண்டிருந்த காதல் தொடர்பு பற்றி மனைவி என்ற ஸ்தானத்திலமரும் பெண்கள் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. இந்த நிலை இங்குமட்டுமல்ல; உலக முழுவதும் ஏறத்தாழ இப்படித்தான்!

ஆனால், மனைவி என்ற ஸ்தானத்தைப் பெற்றுவிட்ட ஒரு பெண்ணின் பழைய காதலைக் கேள்விப்பட்டு எந்த ஆணும் மன அமைதி அடைவதில்லை. எவ்வளவு அறிவும் பண்புணர்ச்சியும் பெற்றவனாயினும் ஆண்கள் இதில் விதி விலக்காக இருப்பது இயல்பல்ல.

ஓர் ஆண் அல்லது பெண் பல முறை மணம் புரிவதும் மணவிலக்கு பெறுவதும் சகஜமாக உள்ள மேல் நாடுகளில் ஒரு பெண் தன்னைக் கணவனுக்கு ஏற்ற பின், பழைய காதலன் - அல்லது கணவனைப்பற்றிப் பொழுதுபோக்காகப் பேசுவதைக் கூட விரும்புவதில்லை.

இளைஞன் நட்புறவோடு பழகியிருக்கிறான் என்பதைக்கூட ஆடவனின் மனம் ஜீரணிப்பதில்லை.

திருமணத்திற்கு முன்னர் பெண்கள் எல்லோருமே ஒழுக்கந் தவறிவிடுகின்றனர் என்பதை நிரூபிப்பதோ, கண்டிப்பதோ நமது நோக்கமல்ல. திருமணத்திற்கு முன்னதாக தன் எதிர்காலம் பற்றித் திடமான முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில் விரும்பத்தகாத சில அனுபவங்களுக்கு பெண்கள் இலக்காகியிருக்கக் கூடும்.

அந்தச் சூழ்நிலையில் அந்த அனுபவங்களைத் தவிர்க்க இயலாது என்பதும் உண்மை!

ஆனால் வேறு வகையில் பெண்கள் தங்கள் வாழ்க்கையை நிர்ணயித்துக் கொண்ட பிறகு அந்தப் பழைய அனுபவத்தை தன் கணவனின் சிந்தனைக்கு எட்டாதபடி பாதுகாக்க வேண்டியது மிகமிக அவசியம் என்பதே நம்முடைய போதனை.

## வெள்ள நிவாரண...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் நிவாரண உதவி பெற்றுத் தரும் முயற்சியில் திரு. செல்வநாயகம் ஈடுபட்டுள்ளார். திரு. செல்வநாயகம் தற்போது யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து நிவாரண வேலைகளைக் கவனித்து வருகிறார்.

மன்னார்ப் பகுதியிலும் மிகப் பெரிய சேதம் ஏற்பட்டுள்ளது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி களை செய்வதில மன்னார் எம். பி. திரு. அழகக்கோன் [illegible] யாது ஈடுபட்டுள்ளனர்.

கொட்டும் மழையிலும், புயலுக்கும் மத்தியில் அகதிகளுக்கு உதவுவதில் ஊணுறக்கமின்றி அலைந்து திரிந்த வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ அமிர்தலிங்கத்தின் கார் பலத்த சேதமடைந்தது. அதைக்கூட கவனியாது திரு. அமிர்தலிங்கம் நிவாரண வேலை [illegible]

# திரைவாணன் பதில்கள்

கே. ராஜேந்திரன்
மின்டுல

கே: தென்னகத்தில் அரசகட்டளை படமும் தங்கை படமும் ஒன்றாகத்தானே வெளியிடப்பட்டன, இலங்கையில் ஏன் இன்னும் அரசகட்டளை வெளியிடப்படவில்லை.

ப: விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் வெளியிடப்படும்.

ஃ

எஸ். யோகதாஸ்
திருமலை

கே: எம். ஜீ. ஆருடைய இடத்தில் வருங்காலத்தில்யார் இருப்பார்?

ப: கலைவாணர் விட்டுச் சென்ற இடம் எப்படி காலியாகக் கிடக்கிறதோ அதேபோல எம். ஜி. ஆரின் இடமும் காலியாகவே கிடக்கும்.

ஃ

ஐ. இரத்தினசோதி
காங்கேசன்துறை

கே: தமிழகத்தில் 50 நாட்கள் ஓடிய திருவருட் செல்வரை 14 நாட்கள் ஓடிய காவல்காரன் வசூலில் முறியடித்து விட்டதாமே உண்மையா?

ப: உண்மைதான்!

கே: புதிய பறவை சாந்தி தியேட்டரில் 100 நாட்கள் ஓட்டப்பட்டதாக நான் சொன்னேன். எனது நண்பன் வெற்றிகரமாக 100 நாட்கள் ஓடியது என்றான் ஆகவே இவ் விரண்டில் சரியான தாபென்ன?

ப: வெற்றி உங்கள் நண்பருக்கே!

ஃ

பி. மகாலிங்கம்
பருத்தித்துறை

கே: இவ்வளவு காலமும் சண்டைக் காட்சிகளை அமைந்துத் திரிந்த சிவாஜி கணேசன் இப்பொழுது பல படங்களில் சண்டை செய்கிறாராமே இது எதைக் காட்டுகிறது?

ப: மக்களின் ரசனைக்கு வளைந்து கொடுக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

ஃ

செல்வன் க. க. சந்திரதேவா
திருகோணமலை

கே: 'கலைக்குரிசில்' சிவாஜி கணேசனின் முகவரி என்ன?

ப: போக்ரோடு, சென்னை 17.

கே: நடிகர் திலகத்தின் 'தங்கை' படம் தென்னகத்தில் எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 56 நாட்கள்

ஃ

இமையாணன்
உடுப்பிட்டி

கே: இது வரையில் நாகேஷ் எத்தனை படங்களில நடித்துள்ளார்?

ப: 155 படங்களில்!

ஃ

க. மலர்ராஜன்
திருகோணமலை

கே: கல்யாணப்பரிசு படத்தில் டீ. டீ. என்ற பாடல் இடம் பெற்றுள்ளதா?

ப: ஆம்!

கே: கவிஞர் கண்ணதாசனையும் கவிஞர் வாலியையும் ஒப்பிட்டால்...

ப: கண்ணதாசன் பாடல்களில் இப்போது 'சரக்கு' இல்லை. வாலியின் பாடல்களில் சிறிது காணப்படுகிறது.

கே: ஸ்ரீதரின் படங்கள் தற்போது வெற்றியடையாததற்குக் காரணம் என்ன?

ப: எந்த நாளும் சினிமா ரசிகர்களின் 'டேஸ்ட்' ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதனால் தான்.

கே: கே. ஆர். விஜயா திரையுலகை விட்டு நீங்கப் போவதாகக் கூறினாரே? விலகுவாரா?

ப: விலகப்போவதாக அவர் ஒரு போதும் கூறியதில்லை.


**வாங்கி விட்டீர்களா?**



**எம். ஜி. ஆர். கொலைமுயற்சி வழக்கு**

**விசாரணை விபரங்கள்**

முழுவதும்

புத்தக வடிவில் வெளிவந்து

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஒவ்வொருவரிடமும்

இருக்க வேண்டிய அரிய சிறந்த நூல்.

விலை ரூபா 1-00

படித்துவிட்டீர்களா?

**ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்**

**விலை ரூபா 2-00**

வி. பி. பி. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

சொற்ப பிரதிகளே கைவசம் இருப்பதால் தேவைக்கு உடன் எழுதவும்.

தமிழ் பேசும் மக்கள் பதிப்பகம்

த. பெ. இல. 1183

கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி மசோதாவுக்கு தி. மு. க. ஆதரவு அளிக்கும்?

## அதனால் சில மாநிலங்களில் காங்கிரஸ் செல்வாக்கு இழக்கும்

இந்தியாவின் ஒருமைப் பாட்டிலும், ஐக்கியத்திலும் நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு, கடந்த சில வாரங்களாக வட இந்தியாவில் நடைபெற்று வரும் மொழி வெறி ஆர்ப்பாட்டங்கள் பீதியையும், கலக்கத்தையும் ஏற்படுத்தி விட்டது. வட இந்தியர்களின் குறிப்பாக இந்தி மொழி பேசும் மக்களின் மொழி வெறி, இந்தியாவை எங்கு நோக்கி அழைத்துச் செல்லும் என்பதைக் கூறத்தேவையில்லை. பாரதம் மீண்டுமொரு முறை பிளவைச் சந்திக்க வேண்டுமா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

இந்திமொழி பேசாத மக்களின் பீதியையும், சந்தேகத்தையும் போக்குவதற்காக இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை, இந்தியுடன் ஆங்கிலமும் துணை ஆட்சி மொழியாகக் கூடிய வகையில் ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படும் என்று ஏற்கெனவே நேரு உறுதி மொழியளித்திருந்தார்

காலங்கடந்தாவது நேருவின் உறுதி மொழியை அமுல் நடத்தக்கூடியதாக இப்பொழுது ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக திருமதி இந்திராவை பாராட்டத்தான் வேண்டும்.

### வடவரின் நோக்கம்

ஆனால், மசோதா சமர்ப்பிக்கப்பட்டதை எதிர்த்துவிட இந்தியாவில் நடந்துவரும் குழப்பங்களும், இந்திவெறியர்களின் ஆர்ப்பாட்டங்களும், தென்னக மக்களின் அச்சத்தை ஊர்ஜிதம் செய்வதாயிருக்கின்றன. இந்தி ஏகாதிபத்தியம் ஒன்றை ஏற்படுத்துவதே தீவிர வடவரின் நோக்கம் என்பது புலப்படுகின்றது.

இந்தி ஏற்கனவே ஆட்சி மொழியாகிவிட்டது. எனவே இந்தி பேசும் மக்களின் எந்த உரிமையும் நிச்சயம் பாதிக்கப்படாது.

### நியாயம் இல்லை

இந்தி ஆட்சி மொழியாவதால், தங்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படும் என்று இந்தி பேசாத மக்கள் அச்சப்படுகிறார்கள். எனவே அவர்களின்அச்சத்தைபோக்குவதற்காக நேரு கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையில் ஆங்கில நீடிப்புமசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது இந்திக்காரர்களுக்கு இந்தியும், இந்தி பேசாத மக்களுக்கு அவர்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்கும். இதை எதிர்ப்பதற்கு நியாய பூர்வமான எக்காரணமும் இருக்க முடியாது — ஏகாதிபத்திய வெறியைத் தவிர.

இதுவரை உத்திர பிரதேசத்தில் நிகழ்ந்து வந்தமொழி வெறிக் குழப்பம், இப்போது இந்தியத் தலைநகருக்கும் பரவியுள்ளது.

புதுடெல்லியிலுள்ள தென்னவர்களின் பாடசாலையொன்றும், தென்னக மாணவர் சிலரும், தாக்கப்பட்டுள்ளனரென்றும். ஆக்ரா சென்றிருந்த மூன்று தமிழக எம். எல். ஏக்கள் நையப் புடைக்கப் பட்டனரென்றும், பாராளுமன்றத்தில் தி. மு. க. எம். பியான நாஞ்சில் மனோகரன் முறையிட்டுள்ளார்.

வடக்கே நடக்கும் கலவரங்களின் எதிரொலி தெற்கிற்கும் பரவ அதிக காலமெடுக்காது.

லோகசபை உறுப்பினர்களிடையேயே இந்திமொழிவெறி எவ்வளவு ஆழமாக பரவியுள்ளதென்பதை, ஒரு இந்தி உறுப்பினர் ஆங்கில மசோதாவை சட்ட சபையிலேயே தீயிட்டு எரித்த பண்பாடற்ற செயல் நன்கு எடுத்துக்காட்டுகிறது. காங்கிரசைச் சேர்ந்த சேத் கோவிந்ததாஸ் என்ற உறுப்பினர் இராணுவத்தை தென்னாட்டுக்கு அனுப்பி இந்தியைத் திணிக்க வேண்டும் என்று விபரீத யோசனை கூறியிருக்கிறார்.

இன்று இந்தியாவுக்கு பல சிக்கலான பிரச்சினைகள் இருக்கின்றன. உணவு நெருக்கடி ஒரு பக்கம். அண்டை நாடுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் மறுபக்கம். இந்த நிலையில் மொழிப் பிரச்சினையில் நேரத்தையும், சக்தியையும் அதிகம் செலவிட முடியாது.

ஒருமைப்பாடு பற்றி இந்தி பேசாத மக்களை விட, இந்தி பேசும்மக்களுக்கே இன்று அதிக அளவு பிரசாரம் தேவைப்படுகிறது.

ஆங்கிலத்தையும் ஒரு உத்தியோக மொழியாக்கும் மசோதாவை இந்திய அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. இதனையொட்டி காசி, அலகாபாத, டில்லி முதலிய வட இந்திய நகரங்களில் மாணவர்கள் ஆங்கில எதிர்ப்பு கலகத்தில் குதித்துள்ளனர். தென்னகத்தில் மாணவர்களின் இந்தி—எதிர்ப்புப் போராட்டம்—வட இந்தியாவின் மாணவர்களின் ஆங்கில எதிர்ப்புப் போராட்டம் நல்ல வேளையாக இவ்விரண்டிக்கும் மத்தியில் பிரதமர் இந்திரா நிற்கிறார். அவர் மத்தியில் இல்லையேல் இரு மாணவர்களும் மோதிக்கொண்டு, நாடு இரண்டுபட்டுவிடும்.

தி. மு. க. இந்த ஆங்கில மசோதாவை ஆதரிக்குமா? தி. மு. க. கையிலிருக்கும் மிக வலுவுள்ள பிரசார ஆயுதமே ஆங்கிலமே அரசகரும மொழியாக வேண்டுமென்ற கோரிக்கை-இந்த மசோதாவை தி. மு.க. ஆதரித்தால் அந்த ஆயுதம் ஓரளவு வலு விழந்துவிடலாம். ஆரம்பத்தில் ஆங்கில மொழி மசோதா வேண்டுமென்று தி. மு. க. கோரியது. மசோதா நிச்சயம் வரும் என்று தெரிந்ததும்...மசோதா போதாது—ஆங்கிலத்துக்கு இடமளிக்கக் கூடியதாக அரசியற் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று தி. மு. க. கோரியது. ஆனல் இந்த மசோதாவைத் தி. மு. க. எதிர்த்தால் அது தீவிர மொழிவெறியுள்ள கட்சி என்ற எதிரிகளின் பிரசாரத்துக்கு இடமளித்துவிடும். ஆகவே தி. மு. க. மசோதாவை ஆதரிக்குமென்றே தெரிகிறது. தி. மு. கவின் ஆதரவைப் பெற பிரதமரும் முயற்சி செய்கிறார்.

இம் மசோதாவின் விளைவாக காங்கிரஸ் இந்தி பேசும் பிரதேசங்களில் தனது செல்வாக்கை ஓரளவு இழந்துவிடும்—செல்வாக்கை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கும் நிலையிலும் ஆங்கிலத்தை அரசகரும மொழியாக்க காங்கிரஸ் ஆட்சி முன் வந்தது ஓரளவு பாராட்டப்பட வேண்டியதே!

---

# சவால் விடுத்த வவுனியா எம். பி. சவாலை ஏற்றதும் பின்வாங்கினர்

## ஜீ. ஜீயை புறமுதுகிடச் செய்த 5கேள்விகள்

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு சாதித்தது என்ன? இதையிட்டு பொது மேடையில் விவாதிக்க இதோ நான் தயார் என்று சவால் விட்டார், வவுனியா எம். பி. உடனே கூட்டத்தில் இருந்த தமிழரசு ஆதரவாளரான திரு. பி. மார்க்குப்பிள்ளை. சவாலை ஏற்பதாக கூறி அதே மேடையிலேயே விவாதிக்க தயாராக இருப்பதாக எழுதிக் கொடுத்தார். ஆனல் சவாலை விடுத்த திரு. சிவசிதம்பரம் பின்வாங்கினர். இச் சம்பவம் முல்லைத் தீவில் அண்மையில் நடைபெற்ற பொ. கட்சி கூட்டத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவித்தியாலயத்தில் அண்மையில் பொ. கட்சி கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஆள்தொகையை அதிகமாக காட்டுவதற்காக போதும் சிறிய அறையில் இக் கூட்டம் நடைபெற்றது.

'இக் கூட்டத்தில் வவுனியா எம். பி; பேசும்போது, 'தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இதுவரை என்ன சாதித்துவிட்டது? இதுபற்றி எவருடனும் விவாதிக்க நான் தயார். திரு. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், திரு. நாகநாதன் எவரென்றாலும் வரட்டும்' என்று 'சவால்' விட்டார்.

• சவாலைக் கேட்டிருந்த தமிழரசுக் கட்சி ஆதரவாளரான திரு. பி. மார்க்குப்பிள்ளை உடனடியாக ஒரு கடிதம் எழுதி மேடைக்கு அனுப்பினர். அதில் பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'வவுனியா பா. உ. வுக்கு. நீங்கள் சவாலுக்கு, திரு. செல்வநாயகத்தையும், நாகநாதனையும், அமிர்தலிங்கத்தையும் அழைத்தீர்கள். அவர்கள் வேண்டாம். தமிழரசுக் கட்சியின் சாதாரண ஆதரவாளன் நான். நான் ஏற்கிறேன் உங்கள் சவாலை. மேடைக்கு அழையுங்கள். கட்சிரீதியிலேயே உங்களுடன் தர்க்கிக்க வருகிறேன்.'

கடிதத்தில் ஒப்பமிட்டு தனது விலாசத்தையும் எழுதி கூட்டத் தலைவரிடம் கொடுத்தார். கூட்டத் தலைவர் அதை தமிழ் காங்கிரஸ் தலைவரிடம் கொடுத்தார்.

வவுனியா பா. உ. வின் பேச்சு முடிந்த பின், திரு. பொன்னம்பலம் பேசினார். திரு. பொன்னம்பலத்தின் பேச்சுக்குப் பின்பாவது, விவாதத்துக்கு தாம் அழைக்கப்பட [illegible] என்று கருதி திரு. மார்க்குப்பிள்ளை தயாராக இருந்தார். ஆனல், திரு. பொன்னம்பலம் பேச்சு முடிந்ததும், கூட்டமும் முடிந்தது. திரு. மார்க்குப்பிள்ளை பொது மேடைக்கு அழைக்கப்படவேயில்லை. வவுனியா எம். பி. மேடையின் பின் பக்கத்தால் இறங்கிச் சென்று விட்டார்'.

### புறமுதுகு

இக் கூட்டத்தில் பின் வரும் கேள்விக்கணைகள் தமிழ் காங்கிரஸ் தலைவரை நோக்கி தொடுக்கப்பட்டன. ஒரு கேள்விக்கு கூட மறுமொழி கொடுக்க முடியாமல் தப்பினேன் பிழைத்தேன் என்று புறமுதுகிட்டோடினர் தமிழ் காங்கிரஸ் தலைவர்.

தமிழ் காங்கிரஸ் தலைவரை புறமுதுகிட்டோட வைத்த கேள்விக்கணைகள் வருமாறு:—

(1) பருப்பு, மல்லி மிளகாய் ஆகியவற்றின் பங்கீட்டை இரட்டிக்க வேண்டும் என்று தாங்கள் கேட்டதாகவும், மண் கலந்த மல்லி கொண்டு பாராளுமன்றம் வரை சென்றதாகவும் செய்திகள் வெளி வந்தனவே, இவை உண்மையானல் கலப்பட வியாபாரிகட்கும் கள்ளச் சந்தை காரருக்குமாய் கோர்ட்டில் வாதாடுவதேன்?

(2) தேசிய அரசாங்கத்தை [illegible] வெளியேறுதத என்று சொல்லும் தாங்கள், தேசிய அரசாங்கம் தமிழருக்கு துரோகம் இழைக்குமானல் அதை விட்டு வெளியேறுதது என்?

(3) இந்துப் பல்கலைக் கழகம் கேட்கும் தாங்கள் கத்தோலிக்க பல்கலைக் கழகமும் முஸ்லீம் பல்கலைக் கழகமும் பெற்றுத் தருவீர்களா?

(4) திருகோணமலையில் தங்கள் கட்சியின் பிரதிநிதி இல்லாததால் துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டதை எதிர்க்கும் பொறுப்பு தங்களுக்கில்லை என்று கூறினீர்களே. அப்படியானல் உங்கள் தொகுதியான யாழ்ப்பாணத்திலே, உள்ளூர் சிறு கைத்தொழில் விற்பனை நிலையம் லக்சல என்னும் சிங்களப் பெயரால் அழைக்கப்படுகிறதே அதற்கு என்ன செய்தீர்கள்.

(5) யாழ்ப்பாணக் கச்சேரியிலே ஆங்கிலத்தில் கடமையாற்றிய சிங்கள அதிகாரி ஒருவரை கொழும்பில் இருந்து வந்த மேலதிகாரி சிங்களத்திலேயே கடமையாற்ற வேண்டுமென்று பணித்ததாக செய்தி வெளி வந்ததே அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்.

(5) மாவட்ட சபை வழங்கப்பட்டால் தமிழர் சிங்களவரை ஆட்சி செய்வார்கள் என்று தென் இலங்கை அரசியல் கட்சிகள் வாதிடும் போது மாவட்ட சபையால் தமிழருக்கு விமோசனமே இல்லை என்று தாங்கள் வாதிப்பது ஏன்?

## பொ. கட்சி கூட்டத்தில் சுதந்திரன்

முல்லைத்தீவில் அண்மையில் நடைபெற்ற பொ. கட்சிக் கூட்டத்தில் பேசிய பேச்சாளர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரனைத் திட்டித் தீர்ப்பதில் 'உள்ள திறைவு' அடைந்தார்களாம்.

குறிப்பாக வவுனியா பா. உ.வின் இடமாற்ற 'சேவைகளை' சுதந்திரன் அம்பலப் படுத்தி வந்ததையிட்டு பேச்சாளர் ஒவ்வொருவரும் அங்கலாய்த்தனராம்.

வவுனியா பா. உ.வின் 'சேவைகளை' சுதந்திரனுக்கு தெரிவிக்கும் நபரைத் தமக்குத் தெரியுமென்றும், வயிற்றுப் பிழைப்புக்காக மேற்படி நபர் அத்தொழிலைச் செய்கிறரென்றும், சிறிய பத்திரிகையான சுதந்திரனின் செய்திகளையிட்டு தாங்கள் கவலையடையவில்லையென்றும் கூட்டத்தில் கூறிக்கொண்டனராம்.

— —

## 'கம்பியூட்டர்' பெருகுகிறது

நொடிப் பொழுதில் கணக்குப் போடுதல் போன்ற அரிய செயல்களைச் செய்யும் 'கம்பியூட்டர்' இயந்திரங்களுக்கு சென்னையில் எதிர்ப்பு தோன்றியுள்ளது. 'கம்பியூட்டர்' இயந்திரம் வந்தால், எங்கள் கணக்குத் தீர்ந்து போகுமே என்கிறர் சென்னை அலுவலர்கள்.

ஆனல் ஜெர்மனியில் தற்போது 3500 கம்பியூட்டர் இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. 1975ல் மொத்தம் 8000 கம்பியூட்டர் இயந்திரங்கள்வரை இருக்குமென எதிர்பார்க்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் - பெண் இனமாற்றத்திற்கு சத்திர சிகிச்சை

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள். அவரது பெயர் ஜார்ஜ் ஜார் ஜென்சன் என்பது. ஆள் அழகாக, நன்ருக இருப்பார். ஆனுலும் உள்ளுக்குள் ஒரு விசித்திரமான ஆசையுடன் அவர் டென்மார்க்குக்குச் சென்ருர். சில காலம் சென்றது. ஜார் ஜென்சென் பெண்ணுக மாறி, உலகத்தையே திகைக்க வைத்தார். அன்று இச்சம்பவம் மாபெரும் அதிசயமாய்த் திகழ்ந்தது.

ஆனுல் இன்று...!

ஆண் பெண்ணுவதும், பெண் ஆணுவதும் சகஜமான விஷயமாகிவிட்டது!

மேலை நாட்டு மருத்துவ மேதைகளுள் முன்னணியில் நிற்பவரான டாக்டர் ஜான் சஹாப்ஸ் தாம் மேற்கொண்ட தீவிர இன ஆராய்ச்சியின் முடிவில் அரிய பல சுவையான தகவல்களை வெளியிட்டிருக்கிருர்.

'மனம் உடலமைப்புக்குப் பொருத்தமாய் அமையாவிடில் அந்த மனத்துக்கு ஏற்ற வகையில் உடலை மாற்றுவதொன்றே வழி' என்கிருர் அவர்.

## பெண்ணியல்பு கொண்ட ஆண்கள்

'ஆண்களில் பலர் பெண்களின் இயல்புகளைக் கொண்டிருப்பார்கள். உதாரணமாக சில ஆண்கள் பெண்கள் அணியக் கூடிய ஆடைகளையே தாமும் அணிந்து கொள்ள விரும்புவார்கள். பொதுவாய்ப் பெண்களுடைய குணுதிசயங்கள், போக்கு, பழக்கவழக்கங்கள் அவர்களிடையே நிறையக் காணப்படும். அதேபோல சில பெண்களிடம் ஆண்களின் இயல்புகள் காணப்படும். ஆண்களது குணங்கள் அவர்களிடையே மண்டிக் கிடக்கும்.

இத்தகையவர்களே நாளடைவில் இன-மாற்றம் செய்து கொள்ள முற்படுகிருர்கள்' என்கிருர் அவர்.

ஜான்ஸ் ஹாப்கின்ஸ் எனும் உலகப் பசழ்பெற்ற மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அண்மையில் ஆண்—பெண் இன மாற்றத்திற்காகவே அமைந்துள்ள புது ஸ்தாபனத்தின் பெயர் 'ஜெண்டர் ஐடெண்டிடி கிளினிக்' என்பது.

## மாதத்திற்கு இரு விண்ணப்பம்

இந்த நிறுவனம் மேற்கொள்ளும் இன மாற்றச் சிகிச்சைகள் சட்டரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

1966 ஜூலை மாதத்தில் எளிய முறையில் பணியாற்றத் தொடங்கிய இந்த ஸ்தாபனத்தில் இப்போது சிகிச்சைக்காக மாதத்திற்கு இரு விண்ணப்பங்கள் வீதம் ஏற்கப்பட்டு செயலாற்றவும் படுகின்றன.

சிகிச்சைக்கு வரும் முன் வருபவரின் உடல் வலிமை மனுேதிடம், அவர்களது பூர்வோத்திரம் போன்றவை ஆராயப்படுகின்றன. இன மாற்றத்திற்கு ஏற்றவர்கள் தான் என்று கருதப்பட்ட பின்பு தான் அவர்களுக்கு சிகிச்சைகள் தொடங்கும்.

## பெண்ணுக மாற விரும்பினுல்

பெண்ணுக மாற விரும்பும் ஆணுக்கு முதலில் குறிப்பிட்ட சில மாத்திரைகளைக் கொடுப்பார்கள். அவை அவன் உடலிலுள்ள ரோமங்களை அகற்றுவதுடன், மார்பகங்களையும் பெருக்கவைத்து விடுகின்றன. பிறகு ஆபரேசன் மேற்கொள்ளப்படும். அதன் பிறகும் சில காலத்துக்கு மருந்து வகைகள் அருந்திக் கொண்டிருக்கவேண்டியிருக்கும்.

ஆபரேஷன் சுமார் மூன்று அல்லது நான்கு மணி நேரம் நடக்கும்.

இது வரை மொத்தம் ஐந்து பெண்கள் ஆண்களாக மாறியுள்ளனர்.

இருபது வயதுடைய இரு இளைஞர்கள் (அவருள் ஒருவர் நீக்ரோ) அண்மையில் சிகிச்சை பெற்று பெண்ணுக மாறிவிட்டிருக்கிருர்கள். அவ்விருவருள் ஒருத்தி தற்போது தனது சுயசரிதையை எழுதி வருகிருள்.

மற்ருெருத்தி கூறுவதாவது:—

'என் விருப்பப்படியேபெண்ணுகி விட்டேன். இப்போது ஒரு ஆண்மகனைக் கல்யாணம் செய்துக்கொள்ளத் தயார். ஆனுல் நான் அறுவை சிகிச்சை மூலம் பெண்ணுக மாறியவள் என்பதை அவர் அறிந்து கொண்டு விடவேண்டும்!'

ஆணுக மாற விரும்பும் பெண்களின் எண்ணிக்கை இப்போது வெகுவாக ஏறிவிட்டது. 'வெயிட்டிங் லிஸ்டிலே'யே 100க்கு மேல் இருக்கிறது என்றல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

(நியூஸ் வீக்)

# புது மணமக்கள் குகைக்குள் தேன் நிலவைக் கழிக்கும் அதிசயம்

## லிபியா நாட்டில் வழங்கி வரும் பைபிள் காலச் சட்டம்

ஆணைப் பிறந்துவிட்டயார் வேண்டுமானுலும் நான்கு பெண்களை மணந்துகொள்ளலாம்! இப்படி ஒரு சட்டம் லிபியா நாட்டைச் சேர்ந்த கெய்டோ என்ற இடத்தில் இன்னமும் இருந்துவருகிறது. இத்தனைக்கும் இந்தச் சட்டம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பைபிள் காலத்திலிருந்தே இந்தச் சட்டம் பரம்பரை பரம்பரையாக அங்கு நீடித்துவருகிறது.

ஆனுல் ஒன்று, ஒவ்வொரு முறையும் திருமணம் முடிந்தவுடன் மணமகன் தன் புது மனைவியுடன் கட்டாயமாக ஒரு வார காலத்துக்குத் தேன் நிலவை அனுபவித்தே ஆக வேண்டும் என்று ஒரு நிபந்தனையும் உண்டு. அதே சமயம் தேன்நிலவு என்றவுடன் யாரும் புளகாங்கிதமடைந்துவிடவேண்டியதில்லை. ஏனென்ருல் தரை மட்டத்துக்குக் கீழே—சுமார் முப்பது அடி ஆழத்திலுள்ள குகைகளில் தான் அந்த ஒரு வார காலமும் புதுமணத் தம்பதிகள் தேன்நிலவை அனுபவித்தாக வேண்டும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டால்தான் அங்கு ஒரு ஆண் திருமணமே செய்து கொள்ள முடியும்!

## தேன்நிலவுக் குகை

மணற்பிரதேசமான லிபியா பெரும்பகுதி ஒரு வறண்ட பிரதேசம். எனவே ஆங்காங்கு அங்கே ஆழமான கிணறுகள் காட்சியளிக்கின்றன. அதிலும் பெரும்பாலான கிணறுகள் வறண்ட நிலையில்—வெகுசீக்கிரம் நீர் வற்றிவிடுகின்றன.

அப்படி ஒரு கிணறு வறண்டுவிட்டால் அதைப்பற்றி அங்கு யாரும் கவலைப்படுவதில்லை. மாருக, புதிய தேன்நிலவுக் குகை ஒன்று கிடைத்துவிட்ட மகிழ்ச்சியே அவர்களுக்கு ஏற்படுகிறது.

அந்தக் கிணற்றின் அடிப் பாகத்தில் சுவற்றைக் குடைந்து ஒரு அறையை உடனே உண்டுபண்ணி விடுகின்றனர். அந்த அறையில் ஒரு கட்டில், ஒரு அரைக்கும் கல் (திரிகை), ஒரு அடுப்பு ஆகியவைகளைப் போடுகிருர்கள்.

## பாதாளத்தில் தேன்நிலவு

புதிதாக மணமான ஒரு ஜோடியை உடனே அந்தக் குகையில் இறக்குகிருர்கள். அவர்கள் தங்களுடன் ஒரு வார காலத்துக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு அதில் இறங்குகின்றனர். அன்றிலிருந்து ஒரு வார காலத்துக்கு அவர்கள் அந்தப் பாதாளக் குகையில்தான் இருக்க வேண்டும்.

சரியாக எட்டாவது நாளன்று காலையில் அத் தம்பதிகளின் உறவினர்கள் வந்து அவர்களை அந்தக் குகையிலிருந்து வெளியேற்றுவார்கள். அதன் பின்னர்தான் அத் தம்பதிகள் சுதந்திரமாக வாழ முடியும். அதே ஆண் பதிதாக வேண்டுமானுலும் மீண்டும் ஒரு பெண்ணை மணந்து கொள்ள முடியும்.

## பெண்களுக்கு மதிப்பு

அங்கே ஆண்களை விட பெண்களுக்கு மரியாதை அதிகம் தரப்படுகிறது. எனவே ஒரு பெண்ணை [illegible] கொள்ளுமுன் அத்[illegible] தில் அவளுக்கு இஷ்டந்தானு என்பதைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

எனவே, தான் மணக்க விரும்பும் ஒரு பெண்ணின் முன்னிலையில் ஒரு ஆண் தனது இடது உள்ளங்கையில் வலது கை ஆள்காட்டி விரலால் ஒரு வட்டத்தைப்போட்டுக்காட்டுகிருன். அந்தப் பெண்ணுக்கு அவனை மணக்க பிரியம் இருந்தால் உடனே அவளும் அவனது உள்ளங்கையில் ஒரு வட்டத்தைப் போடுவாள். பிரியமில்லாவிட்டால் அவள் அந்த வட்டத்தின் குறுக்காக ஒரு கோட்டைப் போட்டுவிடுவாள்.

பெண் சம்மதம் தெரிவித்ததும் அந்த ஆண் உடனடியாகத் தனது உறவினர்களிடம் விபரத்தைக் கூறுவான். உடனே அந்த உறவினர் அப்பெண்ணின் பெற்ருேர்களிடம் சென்று அப்பெண்ணுக்குப் பரிசாக எவ்வளவு பணத்தைத் தங்களால் கொடுக்க முடியுமெனக் கூறுவார்கள்.

## குகை கிடைத்தால்தான் திருமணம்

அவர்கள் குறிப்பிடும் தொகை அப்பெண்ணின் பெற்ருேருக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தால் அவர்களும் திருமணத்துக்குச் சம்மதித்து விடுவார்கள். மறுநாளே திருமணம் செய்துகொள்ளவிருக்கும் ஜோடிக்காக 'தேனிலவுக் குகை' தேடிக் கண்டுபிடிக்கப் [illegible] அலங்கரித்து திருமணம் நடக்கும். பிறகு 'குகைத்தேனிலவு' ஒரு வாரம் தொடரும்! ஆனுல் ஒன்று. தேனிலவுக் குகை காலியாகக் கிடைத்த பின்னர் தான் திருமணமே நடைபெறும்.

திருமணத்துக்குப் பின்னரும் கணவன் தனது மனைவியைப் பெரிதும் மதிக்கவேண்டும். அவன் அவளைத் தூற்றிவிட்டாலோ, அல்லது அவன் தன்னைக் கேவலப்படுத்திவிட்டதாக அப்பெண் கருதினுலோ அவள் தனது உடைகளைக் களைந்துவிட்டு, பிறந்த மேனியாய் தனது பெற்ருேர்களிடம் போய்ச் சேர்ந்துவிடுவாள். அவள் தனது கணவனை விவாகரத்து செய்துவிட்டாள் என்று இதற்குப் பொருள்.

அதே சமயம் அக்கணவன் அவளையே மீண்டும் மனைவியாக்கிக்கொள்ள நினைந்தால் கூட பழையபடியும் முதலில் திருமணத்திற்கு முன் என்னென்ன சம்பிரதாயங்கள் அனுஷ்டிக்கப்பட்டனவோ அத்தனையையும் மீண்டும் கடைப்பிடித்தாக வேண்டும். மொத்தத்தில் புதிதாகத் திருமணம் செய்துகொள்வது போலத்தான் எல்லாமே நடக்கும்.

எனவே அவன் பெரும்பாலும் பழைய மனைவிக்குப் பதிலாக இப்போது புதிய பெண் ஒருத்தியையே மணந்துகொள்வதில் ஆர்வம் காட்டுகிருன்!



பூமிக்கு தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கும் சந்திரனின் ஓர் பகுதியை மேலே பார்க்கிறீர்கள். இப்படத்தை அமெரிக்காவின் வெளிக்கு அனுப்பி வைத்த ஒபிட்டர் 5 எடுத்து அனுப்பியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நவீன சந்தை எப்படி அமையும்?

பேரெட்டிகளும், ஊழல்களும், நிறைந்து காணப்பட்ட யாழ். மாநகர சபையை, பொது மக்களின் புகாரைத் தொடர்ந்து விசாரணை நடத்திய பின்னர் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் கலைக்க உத்தரவிட்டார்.

அமைச்சரின் முடிவை யாழ்ப்பாண மாநகரசபையின் வரியிறுப்பாளர் பலர் ஆதரித்தாலும் சிலர் எதிர்க்கவே செய்தனர்.

ஆனால், மாநகரசபை கலைக்கப்பட்டு, மாநகர நிர்வாகம் விசேட கமிஷனர்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர், நாளிலும், பொழுதிலும் நகரம் முன்னேற்றமடைந்து வருவது கண்கூடாக காணக்கூடிய உண்மையாகத் தெரிகிறது.

இதனால் அமைச்சரின் அன்றைய முடிவை எதிர்த்தவர்களும், விசேட கமிஷனர்களின் ஆட்சி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று உள்ளூர ஆசைப்படவே செய்கிறார்கள்.

கமிஷனர்கள் ஆட்சியென்று கூறும்போது எந்தவொருவிடயத்தையும், கமிஷனர்கள் அமைச்சரைக் கலந்தே செய்கிறார்கள். கமிஷனர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், உள்ளூராட்சி அமைச்சரின் பரிசாக யாழ். மாநகரத்தில் நவீன சந்தை அமைப்பதற்கு அத்திவாரமிடப்பட்டுள்ளது கண்டு யாழ் மாநகர மக்கள் மட்டுமின்றி வடபகுதி மக்கள் முழுவதும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருக்கிறார்கள்.

நவீன சந்தை அமைக்க வேண்டுமென்ற திட்டம் மாநகரசபையால் 15 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டது.

என்றாலும், நிறைவேற்ற முடியவில்லை. காரணம், மேயர்களை ஏற்றி இறக்கும் திருப்பணியிலும், மேயர்கள் தாம் நினைத்தபடி சந்தை நிறுவப்பட வேண்டிய இடத்தையும், பஸ் நிலையத்தையும் மாறிமாறி இடம் மாற்றி வருவதிலுமே காலத்தைக் கழித்ததுமே.

அமைச்சர் திருச்செல்வம் யாழ். மாநகரத்துக்கு ஆற்றி வரும் பெரும் பணியை நவீன சந்தை அடிக்கல் நாட்டு விழாவின் போது திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமே போற்றிப் புகழ்ந்தார்.

இதற்கிடையில் சில பொய் எழுதும் பத்திரிகைகளும், விரக்தியடைந்த அரசியல்வாதிகளும், யாழ் நவீன சந்தைக்கு உள்ளூராட்சி அமைச்சர் பணம் ஒதுக்க மறுத்துவிட்டதாக புரளிகளை கிளப்பினர். கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்பது போல பொய்யர்களின் புரட்டு அம்பலமாயிற்று.

அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய அமைச்சர் 1967 மே மாதத்திலேயே நவீனசந்தைக்கான பணம் ஒதுக்கப்பட்டதை எடுத்துக் கூறி புரட்டர்களின் முகமூடியை பிய்த்து எறிந்தார்.

அத்திவாரமிடப்பட்டிருக்கும் புதிய மத்திய சந்தை ஏழு கட்டிடங்களைக் கொண்டிருக்கும். முதல் கட்டிடம் புதிய பஸ் நிலையத்திற்கு எதிர்ப்புறமாக தற்போதுள்ள இறைச்சிக்கடைகளுக்கு அருகில் அமையும். ஏனைய ஆறு கட்டிடங்களும் காங்கேசன் துறை வீதிவரை தற்போதுள்ள சந்தையின் இடத்தில் அமைக்கப்படும்.

தொடர்பான பாதைகளுடன் கூடிய இந்த ஏழு கட்டிடங்களுக்கும் தனித்தனியாக மாதிரி வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. முழுச் சந்தையையும் மூன்று கட்டடங்களில் நான்கரை வருட காலத்தில் கட்டிமுடிப்பதற்கு தற்சமயம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டம் இரண்டாம், மூன்றும் கட்டிடங்களைக் கொண்டதாக அமையும். இரண்டாம் கட்டம் நான்காம் ஐந்தாம், ஆறும் கட்டிடங்களை உள்ளடக்கும். இறுதி மூன்றும் கட்டம் முதலாம், ஏழாம் கட்டிடங்களைக்கொண்டிருக்கும்.

### 362 சந்தைக் கடைகள்

தற்சமயம் 120 சந்தைக் கடைகள் 87 தகரக்கடைகள், 10 இறைச்சிக் கடைகள், 13 கருவாட்டுக் கடைகள், பண்ணைப் பறவைகளுக்கான 3 கடைகள் என எல்லாமாக 233 கடைகள் இருக்கின்றன.

புதிய சந்தையில் 10'/10' விசாலத்தில் 162 கடைகளும், 15'/25' விசாலத்தில் 200 கடைகளுமாக மொத்தம் 362 கடைகளிருக்கும். இம்மாதிரி வடிவ அமைப்பின் பிரதான சிறப்பியல்பு என்னவெனில் ஒவ்வொரு கட்டிடமும் தனித்தனியாக அமைவதே!

முதலாவது கட்டிடத்தின் உட்பகுதி பழக்கடைகளையும், ஏனைய மூன்று பக்கங்களும் தெருவைப் பார்த்திருக்கும் கடைகளைக் கொண்டிருக்கும்.

இரண்டாவது கட்டிடத்தின் உட்பக்கம் இறைச்சிக்கடைகளையும், ஆஸ்பத்திரி வீதியையும், கி. பொன்னம்பலம் வீதியையும் (மின் நிலைய வீதி) பார்க்கும் பகுதிகள் கடைகளையும்கொண்டிருக்கும்.

மூன்றும் கட்டிடம் உட்புறம் மீன் கடைகளையும், மற்றிரு பக்கங்களும் தெருக்களைப் பார்த்திருக்கும் கடைகளையும் கொண்டிருக்கும்

நான்காம் கட்டிடம் உட்பக்கத்தில் பாக்குக்கடைகளையும், கடகக் கடைகளையும், தெருக்கள் இரண்டையும் பார்க்கும்படியான கடைகளையும்கொண்டிருக்கும்.

கட்டிடங்கள் ஐந்தும் ஆறும் மரக்கறிக்கடைகளை உட்புறமும், வெளிப்புறத்தில் இரு தெருக்களையும் பார்க்கக் கூடியதாகக் கடைகளையும் கொண்டிருக்கும்.

கடைசிக் கட்டிடம் பலசரக்குக் கடைகளை உள்ளாகவும் ஏனைய மூன்று பக்கங்களிலும் கடைகளையும் கொண்டிருக்கும். காலத்திற்கேற்றதாக சந்தை நவீன உண்டிச் சாலைகளையும், பாற்சாலைகளையும் கொண்டிருக்கும்.

### சகல பொருட்களையும் பெறலாம்

ஒருவர் தனது தேவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக சகல பொருட்களையும் உள்ளடக்கிய ஓர் பாரிய சந்தையாக இது அமையும்.

தற்போதுள்ள பிள்ளையார் கோவில், வைரவர் கோவில் ஆகியவற்றுக்கு கடைசிக் கட்டடத்தில் இடங்களை ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தங்கா சத்திரத்திற்குப் பதிலாக இளைப்பாறும் இடங்களாக இரண்டு விசாலமான அறைகளை ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2-ம், 3-ம், 4-ம், 5-ம் கட்டிடங்களின் மாடிகள் தனித்தனிக் கூறுகளாகவும், சம்பந்தப்பட்ட கடைகளிலிருந்து படிகளைக் கொண்டனவாகவும் வசிப்பிடங்களைக் கொண்டிருக்கும்.

### வாடகை அறைகள்

குறைந்த வாடகையில் வெளியூர் பிரயாணிகளின் வசதிக்காக புகையிரத நிலையத்திலுள்ள அறைகளைப் போன்று முதலாம் கட்டிடத்தின் மாடியில் தங்கும் அறைகளும், இளைப்பாறும் அறைகளும் இருக்கும்.

முழுச் சந்தைக்கும் நீர் விநியோக சேவை, வடிகால் அமைப்பு வசதிகள் மற்றும் கழுவு மலகூட வசதிகள் ஆகியன ஏற்படுத்தப்படும். கழுவு மலகூடக் குழாய்கள் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சாக்கடைக் குழாயுடன் இணைக்கப்படும்.

ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி, மின் நிலைய வீதி ஆகியன இரு வழிப் பாதைகளாகவும், வீதிகளில் மத்தியிலிருந்து வெளிச்சம் வெட்டப்படும் மத்திய புல்தரைப் பாதையைக் கொண்டவையாகவும் அமையும்.

முழுச் சந்தைக்குமான மதிப்பீடு மூன்றரைக் கோடி ரூபாவாகும். இதில் முதல் கட்டத்திற்கு மட்டும் எட்டு இலட்சம் ரூபா செலவாகும்.

## நிழலின் கூடு

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

சித்து ஓடிக்கொண்டிருந்தன. அதை அவனது முகம் பிரதிபலித்தது.

அவ்வேயே கவனித்துக் கொண்டிருந்த நான் கேட்டேன் 'பாவம் இந்தக் கிழவன். ஏதோ தவறுதான் நடந்திருக்கிறது.'

'அதெப்படிச் சொல்கிறீர்கள். இப்படி எத்தனையோ பேரைக் கண்டிருக்கிறோம்...'

'அப்படியே தானிருந்தாலும் உங்களை ஏமாற்ற வென்று செய்திருக்க மாட்டான்...'

நடராசா என்னைப் பார்த்தான். நான் சொன்னேன் 'உலகத்தில் எவருமே ஏமாற்றுக்காரர்களாகப் பிறப்பதில்லை.

அவனுக்கு ஏனோ வார்த்தைகள் வரவில்லை. மீண்டும் நான் தான் 'நடராஜ் எல்லாத்திற்குமே வறுமைதான் காரணம். இன்று பேப்பர் பார்த்தீரா? அரிசி ஏற்றி வந்த ஒரு லொறியை எங்கோ ஒரு பாழடைந்த வீட்டிற்கு வழிகாட்டிச்சென்று கொள்ளையடித்தார்களாம். ஏன்? இனி கூப்பனுக்கு ஒரு கொத்து அரிசிதான் என்பதனுல் தானே...'

நாங்கள் இப்படி கதைப்பதற்கு வசதியாக ஒரேயொருவர் மாத்திரமே மேல் தட்டிலிருந்தார்.

நடராசாவின் கண்கள் பனிப்படலத்தைப் போலிருந்தன. அவனது மனம் இளகிவிட்டது என்பதைக் கண்டு கொஞ்சம் தாராளமாகவே கதைத்தேன்.

'என்ன இருந்தாலும் நீங்கள் அப்படியெல்லாம் பேசியிருக்கக்கூடாது. அந்தக் கிழவனுக்கு என்னென்ன கஷ்டங்களோ?...

'இரண்டு பேருமே சேர்ந்து கொண்டல்லா பேசிவிட்டீர்கள்...பாவம்...

'நடராஜ் நீராவது ஒரு ஐந்து சதத்தைக் கொடுத்து விஷயத்தை முடித்திருக்கலாமே.'

'இந்த உத்தியோகத்தில் அப்படியெல்லாம் செய்ய முடியாதே. டிக்கட் பரிசோதகர்கள் வேறு இருந்தார்களே. தங்களின் பிறமோஷனுக்காக' எங்கே ஒருசந்தர்ப்பம் கிடைக்கும் என்று காவலிருப்பவர்கள் கண்டால் உடனே உத்தியோகத்துக்கே ஆபத்து வந்தாலும்...!

'ஒருவனின் கௌரவத்தை விட உமது உத்தியோகத்தில் அத்தனை பற்று...'

'அதற்கில்லை. என்னை நம்பித்தான் எட்டுப் பேரின் வாழ்வே நடக்கிறது. அவர்களுக்கெல்லாம் என் உத்தியோகம் கடவுளைப்போல...'

'பார்த்தீரா? வறுமைக்கு எங்குமே ஒரே உருவம் தான். நடராஜ், உமது நிலை போலத் தான் அந்தக் கிழவனின் குடும்ப நிலையும் இருக்கலாம் என்று ஏன் உம்மால் நினைக்க முடியவில்லை.'

நான் முடிக்கு முன்பே நடராசாவின் குரல் வெடித்துச் சிதறியது.

'ஹா!' நான்தான் இப்படி அதிர்ச்சியுற்றேன்.

நடராசா கூறியதைக்கேட்டு நான் குருடாய், செவிடாய், முடமாய் நிர்மானுஷ்யனாய் ஆனேன்.

நடராசாவின் செயலின் பொருள் இப்போதுதான் எனக்குப் புரிந்தது.

அந்தக் கிழவர் டிக்கட் இல்லாமலிருந்து பிடிபட்டால் கொண்டக்டரின் கதி...?— குறைந்தது இருப[illegible] ரூபாயாவது 'பைன்' போடுவார்களே...

அந்தக் கொண்டக்டரின் நிலை என்னவோ?

பொறுப்பு, கடமை என்பதெல்லாம் ஒருவனோடு நின்றுவிடுவதல்ல. சங்கிலித்தொடர் போல இருக்க வேண்டியது அறுந்தால்...

அலுவலக நேரத்தில் காண்டீனுக்குள்ளே சுற்றும் என் சக ஊழியர்களின் 'கடமையுணர்ச்சி' என்னைப்பார்த்துச் சிரித்தது.

டிக்கட் கொடுப்பது மட்டுமா நடராசாவின் கடமை.

அந்தக் கடமையின் நிழலில் ஒரு குடும்பமே இளைப்பாற வேண்டுமே.

அந்த நிழலைத் தருபவனிடம் அவனின் குடும்பத்தின் பெரியவரே சின்னத்தனம் புரிந்தால்...?

ஆமாம்! அவர்—அந்தக் கிழவர்— நடராசாவின் தந்தைதானும்.

## தேர்தல் கமிசனர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. இ. சரவணமுத்து என்பவருக்கு சிங்களத்தில் வாக்காளர் அட்டை அனுப்பப்பட்டதைச் சுட்டிக்காட்டி திரு. செல்வநாயகம் எழுதிய கடிதத்துக்கு திரு. அபேயசிங்கா அனுப்பிய பதிலிலேயே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''எந்த மொழியில் வாக்காளர் அட்டைகள் அனுப்பப்பட வேண்டும் என்பதற்கு சட்டத்தில் எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. ஆனால் எமது திணைக்களம் 1960-ம் ஆண்டிலிருந்து, சிங்களவர்களுக்கு சிங்களத்திலும், தமிழர்களுக்குத் தமிழிலும் வாக்காளர் அட்டைகளை அனுப்பிவருகிறது. இதே முறைதான் உள்[illegible] வருகிறது.''

## கிளிநொச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாக எதிர்த்தார். (முன்னைய இரண்டு கிராமசபை கூட்டத்திலும் பட்டினசபை தேவையென தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.) அக்கிராசனர் தனது நிலையை ஸ்திரப்படுத்த மக்களையும், சபையின் அங்கத்தவர்களையும், தமிழரசுக் கட்சிக்கும், பாராளுமன்ற உறுப்பினருக்கும் எதிராகப் பயன்படுத்தும் வேலையில் ஈடுபட்டார்.

### சதி வேலைகள்

கிளிநொச்சிக்குப் பட்டினசபை அந்தஸ்து கிடைக்கக் கூடாது என்பதற்காக தன்னுடைய அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்தினர். குறிப்பாக கிராமசபையின் எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் அவரது செல்வாக்குப் பலிதமாகாமையால், அரசியல் அடிப்படையில் தமிழரசுக்கட்சிக்கு எதிராக இயங்கி வருகின்ற தமிழ்காங்கிரசில் சேர்ந்தார். ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் அதிலிருந்து சமசமாஜக்கட்சிக்கு மாறி தொடர்ந்து தனது நிலையைக் காப்பாற்றிக்கொள்ள. தமிழ் காங்கிரசில் சேர்ந்தார்.

இவர்கள் கிராமசபையைப் பொறுப்பு எற்பதன் முன் தீர்மானிக்கப்பட்டு அதற்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்த மின்சாரத் திட்டத்தை கடைசி நேரத்தில் இரவோடு இரவாக முடிந்தும் முடியாமலும் திறந்து வைத்தனர். (இவர்கள் வந்து இரு வருடங்கள் இத்திட்டம் செயல்படாமல் பெட்டியுள் வைக்கப்பட்டிருந்தது) மின்சாரம் தேவையில்லை என்று குறிப்பிட்ட இந்த கிராமசபைத் தலைவர் அவசர அவசரமாக் மின் இணைப்பு வேலைகளைச் செய்வித்தார். பஸ் நிலையம், நூல் நிலையங்களும் திறக்கப்பட்டன.

எனினும் ஆனந்தசங்கரி அவர்கள் தலைவராக வந்த பின்பு சுகாதாரத்தின் முக்கிய தேவையான வடிகால் அமைப்புமுறை, குடிநீர் விநியோகம், சந்தை, மலசலகூடங்கள் ஆகியவற்றின் சுகாதாரங்கள் ஆகியன கவனிக்கப்படவில்லை. இவருக்கு எதிராக கிளிநொச்சி பொதுமக்கள் முறையிட்டதின் பலனாக சுகாதாரப் பகுதியினரின் சுகாதாரம்பற்றிய எச்சரிக்கைக்கும் ஆளானார் எனக் கூறப்படுகின்றது. செய்யக்கூடிய வசதிகள் இருந்தும், விளையாட்டுத் திடல், நாடக அரங்கு, பூங்கா புகையிரதக்கடவைகள், ஆதியன எதுவும் செய்யப்படவில்லை.

### வெல்லட்டும் தமிழரசு

எனவே கிளிநொச்சி மக்களின் நலனைக்கருத்தில்கொண்டு நாம் கட்சி ரீதியில் போட்டியிட வேண்டிய நிலையை எதிர்க்கட்சிகள் எமக்கும் பொதுமக்களுக்கும் தந்திருக்கின்றார்கள். எனவே நாம்கிளிநொச்சி பட்டினசபையின் ஏழு வட்டாரங்களிலும் தமிழரசுக்கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நியமித்துள்ளோம். இவர்கள் அனைவரும் வெற்றிபெற்றுகிளிநொச்சிப் பட்டணத்தை நல்லமுறையில் நிர்மாணிக்க, தமிழரசுக்கட்சிக்கும், கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினருக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுக்குமாறு கிளிநொச்சிப் பட்டின சபையின் சகல வாக்காளர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் புதிய வீடமைப்புத் திட்டம்

## உள்ளூராட்சி அமைச்சு பணம் கொடுக்கும்

மட்டக்களப்பில் புதிய வீடமைப்புத் திட்டமொன்று உருவாக்கப்படவிருக்கிறது. இதற்கான செலவை உள்ளூராட்சி அமைச்சு மாநகர சபைக்கு கொடுக்கும். இத்தகவலை திரு. செ. இராசதுரை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இளவாலையைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம் சமாதான நீதவானாக்கப்பட்டதைப் பாராட்டி அவ்வூர் மக்களால் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

நெல்லியடி — கொடிகாமம் வீதியில் யாழ் ஐக்கிய நெசவாளர் சங்க சமாஜ வடமராட்சி விற்பனைக் கிளையை பருத்தித்துறை எம்.பி. திறந்து வைத்தார்.

மந்திகையில் 200 வருடத்துக்கு முற்பட்ட ஆலமரமொன்று பெருமழையின் காரணமாக வேரோடு சாய்ந்தது.

மயிலிட்டியில் காச நோயாளர் ஆஸ்பத்திரிக்கு முன்னால் நிறுவுவதற்கென ஒரு வருடத்துக்கு முன்னர் அத்திவாரமிடப்பட்ட புதிய ஆஸ்பத்திரிக்கான கட்டிடவேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாததால், நோயாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

மயிலிட்டி மக்கள் சார்பில் மீன்பிடி இலாகா தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரொன்றில், தற்போது காங்கேசன் துறையில் இருக்கும் மீன்பிடி நிலையத்தை, மயிலிட்டிக்கு மாற்ற நடவடிக்கையெடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மின்சார இணைப்பு திட்டமொன்றை மின்சார அமைச்சு உருவாக்கியுள்ளது. அனுராதபுரத்திலிருந்து பரந்தனூடாக சுன்னாகத்திற்கும் கந்தளாய் வழியாக திருமலைக்கும் மின்சாரம் வழங்கப்படும்.

சங்கானை பட்டினசபைத் தலைவர், உள்ளூராட்சி அமைச்சுக்கு எழுதிய கடிதமொன்றில், சங்கானை பட்டினசபையிடம் மின்சார விநியோகம் சம்பந்தமான எவ்வித கடனும் கிடையாதென்று அறிவித்துள்ளார்.

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் தமிழ் தெரியாத தாதிமார்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், நோயாளிகள் கஷ்டப்படுகின்றனர்.

ஒலுவில் மேற்கு பாடசாலையின் தரத்தைக் குறைக்க வேண்டாமென்றும், ஜி. ஸி. ஈ வரை வகுப்புக்களை நடத்தும்படியும் மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கம் கல்வி பகுதியை கோரியுள்ளது.

[illegible]

யாழ்ப்பாணத்தில் திறுவப்பட்டிருக்கும் ஈழச்சாலையின் யாழ்ப்பாணத்து உற்பத்திப் பொருட்களுக்கு பதிலாக தென்னிலங்கை உற்பத்திப் பொருட்கள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக யாழ். நெசவு உரிமையாளர் சங்கம் யாழ். அரசாங்க அதிபருக்கு புகார் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ரூபா 10 இலட்சம் செலவில் இரு புதிய நீதி மன்றக் கட்டிடங்கள் நிறுவப்படவிருக்கிறது.

வடபகுதியில் உள்ள சுருட்டுத் தொழிலாளர்களுக்கு மூன்று ரூபா சம்பள உயர்வு வழங்க 25 சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர்.

திருமலை கிண்ணியா, கட்டுக்குளம்பற்று கிழக்கு, கட்டுக்குளம்பற்று மேற்கு, ஆகிய பகுதிகளிலுள்ள 410 ஏக்கர் காணியில் நிலக்கடலை பயிரிடப்படவிருக்கிறது.

திருமலை நீதிமன்றக்கட்டிட திருத்தவேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

உடுப்பிட்டியில் ரூபா 5000 செலவில் ஒரு மதிய நூல் நிலையத்தை அமைக்க உடுப்பிட்டி கிராமசபை தீர்மானித்துள்ளது.

திருமலை அரசினர் ஆஸ்பத்திரியில் நூறு படுக்கைகள் கொண்ட இரண்டு புதிய வார்டுகள் நிறுவப்படவிருப்பதாக திரு. சு. ம. மாணிக்கராசா எம். பி. தெரிவித்தார்.

காங்கேசன் துறையில் ஊர்மக்களால் தொண்டர் படையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் தொண்டர் படை இருட்டுக்களை ஒழிப்பதில் பொலீசாருக்கு உதவும்.

கட்டைபறிச்சான் பாடசாலை வீதியில் உள்ள ஆற்றுக்கு ரூபா 8000 செலவில் பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் பகுதிகளிலே..

காவெட்டி மேற்கிலுள்ள மத்தொலி வட்டாரத்தில் வசிக்கும் 150 க்கு மேற்பட்ட சிறுபான்மைத் தமிழர்களின் குடும்பங்களுக்கும் அத்துளு குளத்திட்டமூலம் குழாய் நீர் வழங்கும்படி மத்தொனி திருவள்ளுவர் சபை சமூகநிலையம் உள்ளூராட்சி அமைச்சரைக் கோரியுள்ளது.

சரவணை நாகேசுவரிவித்தியாலயத்தின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு தீவுப்பகுதி எம். பியை சரவணை கி. மு. சங்கம் கேட்டுள்ளது.

# கண்ணே சற்று திற!

—வே குமாரசாமி—

சோம்பிக் கிடத்தல் சுகமென் றிளமையிலே
கூம்பிய தாமரையாய்க் கொடுக்கிக் கிடந்தாயே,
இன்றைக்கு,
தேம்பி அழுகின்றாய். தித்திப்பாய் முன்பெல்லாம்
வியபோடு நின்று விளாசினாய் தத்துவங்கள்.

தத்துவங்கள் கோடி தலையெடுக்கும் பாடல்கள்
பத்திபத்தி யாயெழுதிப் பரப்பினாய் ஏடுகளில்
அத்தனையும் இன்று அனுபவித்துக்
கொண்டாயோ?
முத்தாம் அவைகள் முறைத்துன்னை
நோக்குதுவோ?

ஆலைக்கரும்பாய் அகத்தினிலே சிந்தனைகள்
மூலம் வடித்தெடுத்துச் சாலச் சிறந்த தெனும்
தூலப்படைத்தாக, பாலப் பருவமெலாம்
காலா வதியாகக் கண்டா கலங்குகிறாய்.

"சமுதாயப் போக்கின் சலசலப்பித் தேற்றுவன
அழிகின்று என்றுநீ! அந்நாளும் கானல்நீர்
நமதுயர்ச்சிக் காக முயற்சி எமதாதல்
அமுதாதும்' என்றாய் அது உண்மை ஆயிற்றோ?

வாடகைக்கு வீடும் வயதானோர் வாக்குமாய்த்
தேடிப் படித்தாய், இரைதேடிப் பல்லிபோல்
வாடி வதங்கி வாய்க்கணவு இன்றியே
பாடி மகிழ்ந்தாயே! என்ன பயன் கண்டாய்?

உண்டியை உண்டு உடலில் வலுவூட்டி
நுண்செவிக்குத் தீண்மை நுகாவளி, நீ
நூலறிவின்
பண்பினில் ஊறிப் படரத் தொடங்கிவிடுவாய்
எண்ணிடமட்டும் இருத்தல் இந்நாடு
விட்டுவிடு-

திண்மைக் குறை[illegible]
உண்மையெனும் [illegible]
கண்ணே! நீ சற்றுத்திற!

# விளம்பரம் மூலம் கணவனைப் பெறும் ஜேர்மன் அழகிகள்

மேற்கு ஜெர்மனியில் மணமான தம்பதிகளில் 1·5 சத விகிதம் விளம்பர மூலம் மணம் பேசித் தம்பதிகளானவர்களே. பல்லாயிரக் கணக்கான தம்பதிகளை விசாரித்து சில சுவையான தகவல்களைப் புள்ளிவிவர நிபுணர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகளில் கலை, கலாச்சாரம், அரசியல் செய்திகளைக் காட்டிலும் அதிகமாக இடம் பெறுவது இப்பத்திரிகை விளம்பரங்களே. இந்த விளம்பரங்களில் வார்த்தைகள் மிக 'செட்'டாக உபயோகிக்கப்பட்டுள்ளது. விளம்பரம் செய்பவர்கள் தன் வயது, உயரம், தலைமயிர் நிறம், கண் விழிகளின் நிறம் இவைகளைப்பற்றிக் குறிப்பிட்டுக் கவர்ச்சி தரும் அடைமொழிகளுடன் தன்னையும் வருணித்துத் தனது ஜோடி எப்படி இருக்கவேண்டும் என்பதையும் குறிப்பிட்டிருப்பது வழக்கம்.

தற்பெருமை மட்டுமின்றி மற்றும் சில கவர்ச்சிகர மொழிகளும் இவ் விளம்பரங்களில் காணப்படுகின்றன. "என் [illegible] அன்பர் [illegible] [illegible] 40 வயது சீமாட்டி தான் வெளியிட்ட விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கிறாள்! "என் இருதயம் தக்க நபர் ஒருவரிடம் அடைக்கலம் புக விரும்புகிறது" என்று ஒரு ஜெர்மன் அழகி விளம்பரம் செய்திருக்கிறாள். ஒரு அறிஞரின் மகள் 20 வயது யுவதி "தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எனக்கு எழுதுங்கள்" என்று விளம்பரம் செய்திருக்கிறாள்!

பெண்கள் திருமண விஷயத்தில் 'வழா வழா' கொள்கையைப் பின்பற்றுவதில்லை. சிலர் பட்டவர்த்தனமாகவே விஷயத்தைத் தெரிவித்து ஒளிவு மறைவின்றிச் சில விஷயங்களைக் கேட்டறிய விரும்புகிறார்கள். தங்களுக்குப் பாங்கியில் உள்ள தொகை எவ்வளவு, தனக்குச் சொந்த வீடு இருக்கிறது கார் இருக்கிறது என்ற தகவல்களை வெளியிட்டு அத்தகைய தகவல்களைத் தங்கள் ஜோடியிடமிருந்து அறிய விரும்புகின்றனர்.

பெரும்பாலான பெண்கள் குணம், தன்மை இவைகளைப் பற்றியே அதிக முக்கியத்துவம் காட்டுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கு வரும் வருமானத்தைப் பிரதானமாக எடுத்துக் காட்டி விளம்பரம் செய்கிறார்கள்.

சாதாரணமாக முன்பெல்லாம் ஆண்கள் தான் தனக்கு இன்ன தகுதியுள்ளவர்கள் மனைவியாக வர வேண்டும் என்று குறிப்பிட்டு அத்தகுதியுள்ள யுவதிகளிடமிருந்து விண்ணப்பம் கோரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது வழக்கம். இதைப் பார்த்துப் பெண்மணிகள் தங்களுக்கு ஏற்றவர்களைப் பொறுக்கி எடுப்பது வழக்கம். தன்னை வந்து பார்க்கும் ஆடவர்களில் யார் தங்களுக்கு ஏற்றவர் என்று யுவதிகள் பொறுக்கி எடுப்பது வழக்கம்.

ஆனால் பெண்களுக்கு அதிக சுதந்திரம் ஏற்பட ஆரம்பித்த பின் யுவதிகள் தங்களுக்கு இன்ன மாதிரி கணவன் அமைய வேண்டும் என்று விளம்பரம் செய்ய ஆரம்பித்தனர். இந்த விளம்பரம் இப்போது அதிகரித்துவிட்டது.

முதல் திருமண விளம்பரம் 1695-ல் ஒரு லண்டன் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. பத்திரிகைகள்மூலம் தொடர்பு ஏற்பட்டுத் திருமணம் செய்து கொள்பவர்களிடையே விவாகரத்து குறைவாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படியிருந்தும் இம்முறை சாதாரணமாக கிண்டல் செய்யப்படுவது நின்றபாடில்லை. பட்டினியாகக் கிடக்கும் ஒரு சைத்ரிகருக்குச் சமைத்துப் போடவும் ஓய்வு நேரத்தில் குஷியாகப் பொழுது போக்கவும் வசீகரமான ஒரு நபர் தேவை என்று விளம்பரம் ஒன்று வெளியாயிற்று. இதற்கு யாராவது மனு செய்துகொண்டார்களா என்பது தெரியவில்லை.


## அச்சகத்தோரே! அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்றோம்.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்.

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

தொலைபேசி: 3411 த. பெ. 1183


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றிகரமான

4வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) — விஜிதா (அட்டன்)

சந்திரபாபு — சாவித்திரி
விஜயா — மனோகர்

நடிக்கும்

# தட்டுங்கள் திறக்கப்படும்

எமது நத்தார் வெளியீடு

சுந்தரராசன், முத்துராமன்,
நாகேஷ், ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன் நடித்த

# மேஜர் சந்திரகாந்த்



இப்பொழுதுகாட்சியளிக்கிறது

வின்சர் (யாழ்ப்பாணம்) — வேலஸ் (கண்டி) — இம்பீரியல் (மட்டுநகர்) — றீகல் (நீர்கொழும்பு)

டிசம்பர் 17 ஞாயிறு முதல்! — எல்பின்ஸ்டன் (மருதானை) — ரொக்சி (வெள்ளவத்தை)

ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா
டி. எஸ். பாலையா, டி. எஸ். முத்தையா, இந்திராதேவி நடிக்கும்



# ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்!

பாடல்: கண்ணதாசன் — இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி — டைரக்‌ஷன்: கே. ஜே. மகாதேவன்

5-வது வாரம்!

ஜெய்சங்கர் ஜெயலலிதா நடிக்கும்
பி. எஸ். வீரப்பாவின்

# யார் நீ?

இரண்டாவது வாரம்!

★ எஸ். எஸ். ராஜேந்திரன், ★ விஜயகுமாரி,
★ நாகேஷ் ★ ரவிச்சந்திரன், நடிக்கும்

# தேடி வந்த திருமகள்

## நான்காவது வாரமாக குதூகலப் பவனி

விறுவிறுப்பான வசனம்! சுறுசுறுப்பான காட்சிகள்!! பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்க்கத் துடிக்கிறார்கள்!

பெண் என்றால் இவள் தான் பெண் — அவள் தான் ராமண்ணாவும் கோபாலகிருஷ்ணனும், விஸ்வநாதனும் சேர்ந்து உருவாக்கிய குடும்பப்பெண்!

சென்ட்ரல் (மருதானை) — ராணி (யாழ்ப்பாணம்)
ராஜேஸ்வரா (மட்டுநகர்) — லிபர்ட்டி (ஹட்டன்)
ஜோதி (திருமலை)



ஜெய்சங்கர், அசோகன், நாகேஷ், விஜயகுமாரி, எல். விஜயலட்சுமி, ராஜம்மா, வாணிஸ்ரீ நடித்த

எமது அடுத்த வெளியீடு — இயக்குநர் திலகத்தின் உயரியபடைப்பு

கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இதுவரை உருவாக்கிய படங்களில் எல்லாம் சிறந்த படம்

★ எஸ். வி. சுப்பையா ★ ரங்கராவ் ★ பத்மினி ★ நாகேஷ்நடித்த

# கண் கண்ட தெய்வம்

அன்னை புரொடக்‌ஷன்ஸ்

# பவானி

கதை - வசனம்: இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

இப்பத்திரிகை ... பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org